REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஒக்டோபர் 22 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வரு. 92 இல. 252 | Tuesday 22, October, 2024 | 20பக்கங்கள் | 50/-




# கடவுச்சீட்டு விநியோகம் வழமைக்குத் திரும்பியது

## நீண்ட வரிசை யுகத்திற்கு நேற்று முற்றுப்புள்ளி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் கடந்த சில வாரங்களாக பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்த கடவுச்சீட்டு விநியோகம், நேற்று திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஒரு தொகை புதிய கடவுச்சீட்டு, நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் அதற்கிணங்க நேற்று திங்கட்கிழமை முதல் கடவுச்சீட்டு விநியோகம் வழமை போன்று இடம்பெறுவதாகவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய கடவுச்சீட்டு நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், கடவுச்சீட்டு பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மக்களுக்குத் தடையின்றி கடவுச்சீட்டினை வழங்குவதற்குப் போதுமான வகையில், கடவுச் சீட்டுக்களை கொள்வனவு செய்வது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

06

# ஈஸ்டர் தாக்குதல்; திரிபுபடுத்தப்பட்ட அறிக்கைகளை ஏற்கத் தயாரில்லை

## பொதுமக்களைத் தவறாக வழிநடத்த முயற்சி



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பொதுமக்களை தவறாக வழிநடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தை சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவொன்றும் விசாரணைகள் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். முன்னைய அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்றில், உயிர்த்த ஞாயிறு

06

# ADB யின் புதிய அபிவி. திட்டங்கள் அடுத்த வருடம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில், புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. அடுத்த வருட ஆரம்பத்தில் இத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஏற்கனவே முன்னெடுக்கப்படும் திட்டங்களைத் தொடரவும் இதற்கான நிதியுதவிகளை வழங்குவதென்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. இந்த வங்கி அதிகாரிகளுக்கும் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே இதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையில் எவரும் நாடகமாட முடியாது

## பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் இல்லையென்றால், அது எவ்வாறு உதய கம்மன்பிலவிடம் சென்றது என்றும் இதில் பாரிய சிக்கல் காணப்படுவதாகவும் சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

இந்த அறிக்கை எவரது வீடுகளுக்கும் எடுத்துச் சென்று இவ்வாறு நாடகமாடும் அறிக்கை அல்ல. அது பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை

06

# வடக்குக்கான ரயில் சேவை திங்கட்கிழமை வழமைக்குத் திரும்பும்

## பாதுகாப்புக் கடவை செயற்பாடுகளுக்கும் ஆட்சேர்ப்பு

## போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்குக்கான ரயில் சேவையை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமைக்குக் கொண்டுவர முடியும் என, போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

ரயில்வே சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல் மற்றும் ரயில் கடவைகளில் கடமைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அடுத்த திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியாக வடக்கு ரயில் சேவையை முன்னெடுக்க முடியும் என்றும் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மொத்தமாக வடக்கு ரயில் பாதையில் பல ரயில் கடவைகள் காணப்படுகின்றன. இவற்றில் பாதுகாப்பு கடமைகளுக்காக ஒரு சிலரே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலரை

06

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை குழுவின் அறிக்கையை வெளியிட்டார் கம்மன்பில

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவராக குறிப்பிடப்பட்டுள்ள ரவி செனவிரத்னவை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பதவியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கைகளை வெளியிடும் வகையில் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான

06

# தனி நபர் கம்பனியாக தமிழரசுக் கட்சி

## கே.வி.தவராசா குற்றச்சாட்டு



ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு எனும் பெயரில் ஒரு கட்சியை உருவாக்கி, வாக்கு கேட்க வேண்டிய நிலையை இலங்கை தமிழரசுக் கட்சியே ஏற்படுத்தியதாக, முதன்மை வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே (20) அவர் இவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழரசுக் கட்சியில் 16 ஆண்டுகள் இருந்தேன். மத்திய குழு, அரசியல் குழு மற்றும் சட்டக் குழுவென, கட்சியின் பல குழுக்களிலும்

06

# 50 துப்பாக்கிகளே இதுவரைக்கும் ஒப்படைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிவில் பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் இது வரை, சுமார் ஐம்பது வரையானவையே மீள, கையளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. விசேட பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் ரவைகளை மீள ஒப்படைக்குமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது.

நவம்பர் 07க்கு முன்னர் இவற்றை ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்டது. சுமார், 1650 துப்பாக்கிகள் இவ்வாறு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரை 50 வரையான துப்பாக்கிகளே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வெலிசரவில் உள்ள அரசாங்கத்தின் வணிக வெடிமருந்து களஞ்சியசாலையில் இந்த துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு

06

# சி.ஐ.டி.யிடம் ஒப்படைக்கப்பட்ட ரத்வத்தவின் செயலாளரது கொலைச் சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளர் மீது, நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கண்டி கட்டுகஸ்தொட்டை பிரதேசத்தில், இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்த அவர், கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.உயிரிழந்தவர் கண்டியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என்றும் சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இக்காலங்களில் அவர், மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்ததாகவும்

06



# சாரதிகளின் போக்குகளால் மாணவர்கள் மன உளைச்சல்

**மாங்குளம் குறூப் நிருபர்**

அதிகளவான பஸ்கள் பயணம் செய்யும் ஏ 9 வீதியில் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவரை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டும் பஸ் சாரதிகள் அசமந்த போக்குடனே நடந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம், கிழவன்குளம், திருமுறிகண்டி பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இப்பிரதேச மாணவர்கள் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர்.

இந்நிலையில், இந்த ஏ 9 வீதியில் செல்லும் பஸ்கள், மாணவர்களின் உரிய நேரத்துக்கு வருவதில்லை என்றும், சிலவேளைகளில் இவ்வீதியால் வரும் பஸ்கள், மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயமாக புதிய ஜனாதிபதி, புதிதாக பொறுப்பேற்ற வடமாகாண ஆளுநர், மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிராகரிக்கப்பட்ட வன்னி வேட்புமனு மீதான விசாரணை இன்று



வன்னி மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் வேட்பு மனுக்கள் குறித்த விசாரணைகள் இன்று (22) விசாரிக்கப்படவுள்ளன .

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வன்னி மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதை எதிர்த்து இக்கட்சி நிதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கின் மீதான விசாரணையே இன்று இடம்பெறவுள்ளது.

இந்த மனு நேற்றைய தினம் (21) உயர் நீதிமன்றத்தின் பிரிதி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்களின் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இம்மனுவை இன்று விசாரிப்பதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக

06

# சர்வதேச செய்திகள்

## இஸ்ரேல் எல்லையில் 'டாட்' ஏவுகணை எதிர்ப்பு கட்டமைப்பு



இஸ்ரேலின் வான் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் வகையில் அமெரிக்கா வழங்கியுள்ள அதிநவீன டாட் ஏவுகணை எதிர்ப்பு கட்டமைப்பு இஸ்ரேல் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்தியுள்ள அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின், அது செயற்படுகிறதா என்று கூற மறுத்துள்ளார்.

ஏற்கனவே அயன்டோம், டேவிட் சிலிங், எரோ 2 எரோ 3 ஆகிய ஏவுகணைக் கட்டமைப்புகளை இஸ்ரேல் கொண்டுள்ள போதிலும் அதற்கு மேலதிகமாகவே இந்த நவீன டாட் ஏவுகணை எதிர்ப்பு கட்டமைப்பை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இஸ்ரேல் ஏற்கனவே மூன்று வகையான ஏவுகணைக் கட்டமைப்புக்களைக் கொண்டிருந்தும் கூட ஈரானின் பிளாஸ்டிக் ஏவுகணைகள் இலக்குகளை அடைந்து இஸ்ரேலில் சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. இப்பின்னணியிலேயே டாட் ஏவுகணைக் கட்டமைப்பை அமெரிக்கா வழங்கியுள்ளது. இத்தகைய கட்டமைப்பை மேலும் இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரேடியோ டவரில் ஹெலி மோதி நால்வர் மரணம்



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் மிகப்பெரிய நகரான ஹூஸ்டனில் உள்ள வானொலி தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றின் மீது தனியாருக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று நேற்று முன்தினம் இரவு மோதி விபத்துக்குள்ளானது. இதனால் ஹெலிக்கொப்டர் வெடித்துச் சிதறியதோடு தீப்பற்றி எரிந்துள்ளது.

இவ்விபத்தில் ஒரு குழந்தை உட்பட நால்வர் பலியானதாக ஹூஸ்டன் மேயர் ஜான் விட்மயர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், இது ஒரு சோகமான நிகழ்வு. இருப்பினும் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர்.

விபத்துக்குள்ளான ஹெலிகாப்டர் எலிங்டன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளது' என்றுள்ளார்.

இவ்விபத்து குறித்து விசாரணை இடம்பெற்று வருவதால், பாதிக்கப்பட்டவர்களின் அடையாளம் உடனடியாக வெளியிடப்படவில்லை.

வானொலி தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீது ஹெலிகாப்டர் மோதும் வீடியோ இணையதளங்களில் வைரலாகியுள்ளது.

## மாலைதீவில் ஒருங்கிணைந்த கொடுப்பனவு முறை அறிமுகம்



ஒருங்கிணைந்த கொடுப்பனவு முறைமை (யூ.பி.ஐ.) மாலைத்தீவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதற்கான அங்கீகாரத்தை மாலைதீவு அமைச்சரவை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

மாலைதீவு அமைச்சரவையின் பரிந்துரைகளைத் தொடர்ந்து இக்கொடுப்பனவு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி முஹமட் முஅய்சு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாலைதீவில் டிஜிட்டல் மற்றும் நிதிச் சேவைகளை செயற்படுத்துவதற்கு தனது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ள இந்தியா ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி முஅய்சு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக அமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அறிக்கை அமைச்சரவையில் முழுமையாக பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி அலுவலகம், இதன் ஊடாக பொருளாதாரம் அதிக பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளும். குறிப்பாக அதிகரித்த நிதி உள்ளடக்கம், நிதி பரிவர்த்தனைகளில் மேம்பட்ட செயற்றிறன் மற்றும் முன்னேற்றகர டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவும் அதில் அடங்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ரஷ்யாவுக்கு 12 ஆயிரம் வீரர்களை வட கொரியா அனுப்பி வைப்பு?



தென் கொரிய உளவுப் பிரிவு தகவல் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு உதவும் வகையில் 12 ஆயிரம் இராணுவ வீரர்களை வட கொரியா அனுப்பி வைத்துள்ளதாக தென் கொரிய உளவு பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து வட கொரியாவும் ரஷ்யாவும் உத்தியோகபூர்வமாக எதுவும் கூறவில்லை.

ஆனால் வட கொரிய வீரர்கள், ரஷ்ய இராணுவ தளத்தில் பயிற்சி எடுத்து ஓய்வு எடுப்பது, ரஷ்ய இராணுவ உபகரணங்களை பெற்றுக்கொள்வது உள்ளிட்ட காட்சிகள் அடங்கிய வீடியோ வெளியாகியுள்ளது.

இந்த வீடியோவை உக்ரைன் உளவுப் பிரிவும் கண்டறிந்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உறுதிப்படுத்தியுள்ளார்.

# வடக்கு காசாவில் இஸ்ரேலின் முற்றுகை உக்கிரம்: வீடுகள், பாடசாலைகள் அழிப்பு

### ஹிஸ்புல்லா வங்கிகள் மீது தாக்குதல்: பிளிங்கன் மீண்டும் விரைவு



வடக்கு காசாவில்

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்புகளுடன் தொடர்புட்ட வங்கிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி இருக்கும் இஸ்ரேல் இராணுவம், வடக்கு காசாவில் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி அங்கு வீடுகள் மற்றும் முற்றுகையில் உள்ள பாடசாலைகள் மற்றும் இடம்பெயர்ந்தோர்களின் தற்காலிக முகாம்களை நேற்று (21) குண்டு வைத்து தகர்த்துள்ளது.

வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாமை சுற்றிவளைத்திருக்கும் இஸ்ரேலிய இராணுவம் அங்கிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்களை முகாமில் இருந்து வெளியேறும்படி உத்தரவிட்டிருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய துருப்புகள் பாடசாலை ஒன்றை ஆக்கிரமித்திருப்பதோடு அங்குள்ள ஆண்களை கைது செய்து அந்தப் பாடசாலை மீது தீ வைத்ததாக அங்குள்ள இந்தோனேசிய மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளனர். இந்தத் தீ மருத்துவமனை பின்பிறப்பாக்கியில் பரவிய நிலையில் மருத்துவமனையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு காசாவில் இஸ்ரேலின் முற்றுகை இரண்டு வாரங்களாக நீடிக்கும் நிலையில் இஸ்ரேலின் வெளியேற்ற உத்தரவை நிராகரித்ததாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இப்பகுதியில் உள்ள மூன்று மருத்துவமனைகளில் இருந்து வெளியேறுவதற்கு அல்லது அங்குள்ள நோயாளிகளை கைவிட்டுச் செல்வதற்கே இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலிய துருப்புகள் மருத்துவமனைக்கு வெளியே நிலைகொண்டிருந்த போதும் இன்னும் உள்ளே நுழையவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இரண்டாவது மருத்துவமனையான அகமால் அத்வானுக்கு அருகே கடந்த ஞாயிறு இரவு இஸ்ரேல் கடும் தாக்குதல்களை நடத்தியதாக அங்குள்ள மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'மருத்துவமனையை ஒட்டி இருக்கும் பாடசாலை மீது இராணுவம் தீ வைத்ததோடு யாருக்கும் மருத்துவமனைக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ முடியவில்லை' என்று இந்தோனேசிய மருத்துவமனையின் தாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை காசாவில் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்து 41 பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. இதில் முற்றுகையில் உள்ள ஜபலியா அகதி முகாமில் மாத்திரம் 33 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு காசாவில் இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் அங்கு குறைந்தது 640 பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காசாவில் கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக இஸ்ரேல் இடைவிடாது நடத்தி வரும் தாக்குதல்களில் 42,600க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் காயமடைந்தோர் எண்ணிக்கை ஓர் இலட்சத்தை நெருங்கியுள்ளது.

இந்நிலையில் வடக்கு காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதற்கும் உயிரிழப்பு மற்றும் அழிவுகளுக்கும் காரணமாகி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் அலுவலகம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், கடந்த ஒக்டோபர் 1 தொடக்கம் 14 ஆம் திகதி வரை கடந்த இரு வாரங்கில் அத்தியாவசிய விநியோகங்களை தடுப்பது போன்ற இஸ்ரேல் எடுத்துவரும் நடவடிக்கைகள் வடக்கு காசா உயிர் வாழ முடியாத பகுதியாக மாற்றப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் போராளிகளை இலக்கு வைப்பதாகக் கூறும் இஸ்ரேல் வடக்கு காசாவில் இருந்து அனைத்து பொதுமக்களையும் வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது. எனினும் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு மத்தியில் மக்கள் வெளியேறுவது ஆபத்தானது என்றும் அங்குள்ள மூன்று மருத்துவமனைகளிலும் எரிபொருும் மற்றும் விநியோகங்கள் தீர்ந்து வருவதாகவும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் கடந்த வாரம் கொல்லப்பட்டதை அடுத்து போர் நிறுத்தம் பற்றி மேற்குலக நாடுகள் நம்பிக்கை தெரிவித்து வந்தபோதும் இஸ்ரேல் அது தொடக்கம் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மற்றொரு போர் நிறுத்த முயற்சியாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் நேற்று (21) மீண்டும் ஒருமுறை மத்திய கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.



லெபனான் பேருட்டில்

காசா போரை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் லெபனானில் மோதல் பரவுவதை குறைக்கும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு பிளிங்கன் பிராந்தியத்திற்கு பயணமாகி இருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் பிளிங்கன் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொள்வது இது பதினொராவது முறையாகும்.

எவ்வாறாயினும் போரை தொடர்வதில் உறுதியாக உள்ள இஸ்ரேல், லெபனானிலும் நேற்று தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்தது. லெபனான் தலைநகர் பெய்ரூட் மற்றும் தெற்கு லெபனானில் தாக்குதல் நடத்திய இஸ்ரேல் ஹிஸ்புல்லா வங்கிகளை இலக்கு வைத்தது.

ஹிஸ்புல்லா கட்டுப்பாட்டில் இருக்கும் தெற்கு பெய்ரூட்டின் தஹீயில் வெடிப்புகள் இடம்பெற்றதோடு பக்கா பள்ளத்தாக்கு மற்றும் தெற்கு லெபனானிலும் தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவான வங்கிகள் மற்றும் நிதிக் கட்டமைப்புகளை இலக்கு வைத்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. அல் கர்த் அல் ஹசன் வங்கியின் கிளைகள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதாக லெபனான் அரச செய்தி நிறுவனமான என்.என்.ஏ. குறிப்பிட்டுள்ளது. அதபோன்று பெய்ரூட்டின் ரபீக் ஹரீரி சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் இருக்கும் வங்கிக் கிளையும் தாக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வங்கி லெபனான் எங்கும் 30 கிளைகளைக் கொண்டிருப்பதோடு இதன் இரு கிளைகள் மத்திய பெய்ரூட்டில் அமைந்துள்ளன.

மறுபுறம் லெபனானில் இருந்து நேற்றும் 25 ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலை நோக்கி வந்ததாக இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. இதில் சிலவற்றை இடைமறித்ததாக குறிப்பிட்டிருக்கும் அது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. முன்னதாக வடக்கு இஸ்ரேல் அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு



இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் இராணுவ தலைமைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான பிரபோவோ சுபியாந்தோ நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளார்.

2014 ஆம் 2019ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி ஜோகோ விடோடோவை எதிர்த்து தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்த இவர், கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் விடோடோவின் ஆதரவுடன் போட்டியிட்டார். அத்தேர்தலில் அமோக வெற்றி பெற்ற பிரபோவோ சுபியாந்தோ தற்போது நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

உலகின் அதிக முஸ்லிம்களைக் கொண்ட நாடான இந்தோனேசியாவில் மக்கள் செல்வாக்கு மிக்கவர் ஜோகோ விடோடோ ஆவார்.

கடந்த ஆட்சியில் பிரபோவோ சுபியாந்தோவை பாதுகாப்பு அமைச்சராகவும் விடோடோ நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னர் சார்ள்ஸுக்கு எதிராக குரலெழுப்பிய அவுஸ். எம்.பி



அவுஸ்திரேலியாவின் பூர்வீக சமூகத்தைச் சேர்ந்த பெண் பாராளுமன்ற உறுப்பினரான லிடியா தோர்ப், மன்னர் சார்ள்ஸ்க்கு எதிராக பாராளுமன்றத்தில் நேற்று குரல் எழுப்பியதால் பரபரப்பு நிலை ஏற்பட்டது. அதனால் எம்.பி உடனடியாகப் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள மன்னர் சார்ள்ஸ் நேற்று அந்நாட்டு பாராளுமன்றத்திற்கு சென்றிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

"இது உங்கள் நிலம் கிடையாது, நீங்கள் என்னுடைய மன்னர் இல்லை. மீண்டும் எங்கள் நிலைத்தை கொடுங்கள். எங்களிடம் இருந்து கொள்ளையடித்து சென்றதை எங்களிடமே கொடுங்கள் என அவர் குரல் எழுப்பியுள்ளார். அத்தோடு ஐரோப்பிய குடியேற்றக்காரர்களால் பூர்வீக அவுஸ்திரேலியர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா 100 ஆண்டுகளுக்கும் மேலாக பிரித்தானிய ஏகாதிபத்திய நாடாக இருந்தமை தெரிந்ததே.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 22 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
ளுஹர் - 11.57
அஸர் - 03.16
மஃரிப் - 05.55
இஷா - 07.05

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஐப்பசி 05
ராகுகாலம் : மாலை : 3.02 - 4.32வரை
சுபநேரம் : காலை : 10.32 - 12.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி




# பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு : 7,38,659 பேர் தகுதி

## 20,551 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக,07 இலட்சத்து 59 ஆயிரத்து 210 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அது தொடர்பில் குறிப்பிட்டதாவது: கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களில் 20,551 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பங்களின்படி 7இலட்சத்து 38 ஆயிரத்து 659 பேர் இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 5 நாட்களுக்கு இடம் பெற வுள்ளன. அதன்படி மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் இம்மாதம் 30 மற்றும் அடுத்த மாதம் 4ஆம் திகதிகளில் தபால் வாக்களிப்பு இடம்பெறும். அத்துடன் அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும்




அடுத்த மாதம் முதலாம் திகதி மற்றும் 4ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது. மேற்படி திகதிகளில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவின் வாகனங்கள் சில நேற்று மீள கையளிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த 06 உத்தியோகபூர்வ வாகனங்களில் மூன்று வாகனங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு கொண்டுவரப்பட்டு, கையளிக்கப்பட்ட வாகனங்களில் ஒரு அம்பியுலன்ஸ், ஒரு வேன் மற்றும் ஒரு கெப் ரக வாகனங்கள் உள்ளடங்குகின்றன.

ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்டுள்ள எழுத்துமூல பணிப்புரைக்கிணங்க நேற்று (21) திங்கட்கிழமை இந்த வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பில் உள்ளதாகக் கூறப்படும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் சரியான தகவல் அல்ல என்றும் அது உண்மைக்குப் புறம்பானவை என்றும் முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக வாகனங்களை மீள, கையளிக்குமாறு ஏற்கனவே ஜனாதிபதி செயலகத்தால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.கூட்டுக்கடித விவகாரம்;

# வெளிவிவகார அமைச்சு விசேட அறிக்கையில் விளக்கம்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஆதரவளிக்கும் கூட்டுக் கடிதத்தில், இலங்கை கையொப்பமிட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சரின், ஐ.நா பொதுச் செயலாளருக்கு ஆதரவளிக்கும் கூட்டுக் கடிதத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை என, வெளியான செய்திகளில் உண்மையில்லை என, அமைச்சு தெரிவித்துள்ளது. 2024 ஒக்டோபர் 11 வெர்பேல் மூலம், ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருக்கு ஆதரவளிக்கும் கடிதத்தில் கையொப்பமிடுவதற்கான தனது விருப்பத்தை, நியூயோர்க்கில் உள்ள சிலியின் நிரந்தர தூதரகத்திற்கு இலங்கை தெரிவித்தது.

பலஸ்தீன பிரச்சினைக்கு இலங்கை தனது நீண்டகால மற்றும் அசைக்க முடியாத ஆதரவை தொடர்ந்து வழங்கி வருகிறது.

06

தினகரன்
THINAKARAN தினகரன்

# 92

வருடங்களுக்கு முன்

## தினகரன்

இன்று 22 ஒக்டோபர் 1932


கண்டியில் மாதர் கூட்டம்
திரு. மேனன் விரிவுரை

## கண்டியில் மாதர் கூட்டம்

### திரு. டப்ளியூ.எல். கிண்டர்ஸ்லியின் கண்டன முழக்கம்

### திரு. மேனன் விரிவுரை

பெண்கள் சுதந்திரத்தின் ருசிகரமான சரித்திர வரலாறும் அரசாங்கசபை அங்கத்தவர்களுக்கு கண்டனமும்

கண்டி மாதர் வாக்குரிமைச் சங்கம் தனது பெயரை கண்டி மாதர் லீக் என்று மாற்றிக்கொண்டிருக்கிறது. இச்சங்கத்தின் வருடாந்த பொதுஜனக் கூட்டம் கண்டியில் கூடியது.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**






இந்தியாவின் 78 சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொழும்பு தாஜ் சமுத்தார ஹோட்டலில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில்,வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் விசேட அதிதியாகக் கலந்துகொண்டதுடன்,கௌரவ அதிதியாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா; கலந்துகொண்டார். இலங்கை இந்திய சமாதான பேரவை இதனை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொது மக்களுக்கு அவசர எச்சரிக்கை

போலித் தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி மக்களிடம் பண மோசடியில் ஈடுபடுபவர்கள் குறித்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களுக்கு இவ்வாறு தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்துவோர், டிப்போ முகாமையாளர்,சிரேஷ்ட அதிகாரி அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள்

ஆபத்தில் சிக்கியுள்ளனர் அல்லது பயணித்த வாகனம் பழுதடைந்துள்ளதால்,ஈஷிகேஷில் பணம் அனுப்புங்கள்

என்றெல்லாம் கூறி,ஏமாற்று வேலைகளில் ஈடுபடுகின்றனர்.இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சியரா லியோன் ஜனாதிபதியுடன் அமைச்சர் விஜித ஹேரத் சந்திப்பு



வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று சியரா லியோன் ஜனாதிபதி ஜூலியஸ் மடா பாவோவை சந்தித்து கலந்துரையாடினார்.சமோவாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காகப் புறப்பட்ட இவர்,இடையில் இலங்கைக்கும் விஜயம் செய்திருந்தார்.இந்நிலையிலே, நேற்று இவர்,வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தையும் சந்தித்தார்.

# ஹிருணிகா உள்ளிட்ட 14 பேரின் வழக்கு விசாரணை பெப்ரவரி 14இல்

## மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 14 பேருக்கு எதிரான முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி (10) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சர்வதேச மகளிர் தினத்தன்று கொழும்பு, கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றைய தினம் மேற்படி முறைப்பாடு தொடர்பான விசாரணை, கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் கறுவாத்தோட்டம் பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தனர். இதன் போது மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் மேற்படி வழக்கு விடயங்களுடன் தொடர்புடைய சட்ட மா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி அத்துல ரணகல, நீதிமன்றத்திடம் விடயங்களை முன் வைத்த போது, பெண்களுக்கு எதிரான சித்திரவதைகள் தொடர்பில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சந்தேக நபரினால் மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதில் அரசாங்கத்தை அசௌகரியத்துக்குள்ளாக்கும் சூழ்ச்சி கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மேற்படி வழக்கு தொடர்பான மனு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், மேற்படி விடயத்தை சட்ட மா அதிபரிடம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் தெரிவித்துள்ளார். இதன்படி மேற்படி முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.


ST&S SINCE 1892
softlogic Finance

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி
மாபெரும் வாகன ஏலவிற்பனை

26 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
2024 ஒக்டோபர் 25 வெள்ளிக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கார்கள்:

| | | |
|---|---|---|
| CBE-3XXX | சுசூகி DAA-MH55S வெகன் R | 2018 |
| KK-0XXX | ஜகுவார் XJL | 2010 |
| KV-4XXX | டொயோட்டா DAA-AZK10-SAI | 2010 |
| KF-9XXX | செரி QQ | 2006 |
| KE-0XXX | கிறிஸ்லர் 300C | 2006 |
| KD-0XXX | மாருதி அல்டோ | 2006 |
| JU-9XXX | கிறிஸ்லர் வாயேஜர் | 2004 |
| 65-4XXX | நிசான் | 1996 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PA-1XXX | நிசான் வெனெட் | 1999 |
| 53-2XXX | மஸ்டா | 1987 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| AAV-5XXX | பஜாஜ் RE | 2014 |
| YN-8XXX | பஜாஜ் RE | 2011 |
| QB-4XXX | பஜாஜ் ஒட்டோ RE 2 ஸ்ரோக் | 2005 |

ஜீப் வண்டி:

| | | |
|---|---|---|
| KC-0XXX | நிசான் X TRAIL | 2006 |

லொறிகள்:

| | | |
|---|---|---|
| PV-3XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2013 |
| PT-0XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2012 |
| PQ-3XXX | மஹின்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக் | 2011 |
| PS-3XXX | டாட்டா ஏஸ் | 2011 |
| LB-4XXX | நிசான் கெப்ஸ்டார் | 2000 |
| 43-7XXX1 | மிட்ஷுபிஷி ஐச்சர் | 1993 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BGR-5XXX | ஹொண்டா டியோ SCV 110 | 2018 |
| BHI-2XXX | YZF - R- 15 | 2018 |
| BIB-7XXX | ஹொண்டா நவி | 2017 |
| BIB-1XXX | ஹொண்டா நவி | 2017 |
| BHG-2XXX | மஹின்ட்ரா ரொக்ஸ்டார் | 2017 |
| BIX-4XXX | ஹொண்டா AVIATOR | 2018 |

பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில்
2024 ஒக்டோபர் 23 புதன் மற்றும் 24 வியாழன் ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்

- **நுழைவு** : ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்** : விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2024 ஒக்டோபர் 29ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

CELEBRATING 132 Years

011 2671468
www.sandslanka.com

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஐப்பசி மாதம் 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 18

**குறள் தரும் சிந்தனை**

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்

நேருக்கு நேராக ஒருவரது குறைகளைக் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம், ஆனால் பின்விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் நேரில் இல்லாத ஒருவரைப் பற்றிக் குறை கூறுவது தவறு.

# மனிதனின் செயற்பாடுகளால் நேருகின்ற பாதக விளைவுகள்!

மனிதன்-யானை மோதல் தொடர்பாக எமது நாட்டில் அதிகளவில் பேசப்பட்டு வருகின்றது. யானையின் தாக்குதலில் அகப்பட்டு மக்கள் உயிரிழப்பதும், மனிதனின் செயற்பாடுகளால் யானைகள் அதிகளவில் உயிரிழப்பதும் எமது நாட்டில் இடம்பெற்று வருகின்றன. எனவேதான் யானைகள்-மனித மோதல் குறித்து இலங்கையில் அதிகம் பேசப்படுகின்றது. ஊடகங்களிலும் இந்த விடயம் குறித்து அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன.

பிராணிகள் எதுவுமே இயல்பில் கொடியவை அல்ல. மனிதனைத் தாக்கிக் கொல்ல வேண்டுமென்ற எண்ணத்தை அவை கொண்டிருப்பதில்லை. பிராணிகளின் வாழ்வில் மனிதன் தொந்தரவை ஏற்படுத்துவதால்தான் அவை மனிதனைத் தாக்குகின்றன. பிராணிகள் மனிதனைத் தாக்குதவதற்கு முதலாவது காரணம், அவை கொண்டுள்ள தற்பாதுகாப்பு எண்ணமாகும். மனிதனால் தமக்கு ஆபத்து நேரப் போகின்றது என்று கருதியே பிராணிகள் மனிதனைத் தாக்குகின்றன.

பாம்புகள், யானைகள், கரடிகள், குரங்குகள் போன்றனவெல்லாம் மனிதனைத் தாக்குவதற்கு முதன்மையான காரணம் அவற்றின் கொடிய குணம் அல்ல. மனிதனால் தமக்கு ஆபத்து நேர்ந்துவிடப் போகின்றதென அஞ்சியே அவை தாக்குவதற்கு முற்படுகின்றன.

புவியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வதற்கான உரிமை உள்ளது. பூமியானது மனிதனுக்கு மாத்திரமே சொந்தம் என்று எவராவது நினைப்பார்களானால் அச்சிந்தனை முட்டாள்தனமானது. புவியில் மனிதனைப் போன்று ஏனைய உயிரினங்களும் அவசியமானவை. உலகில் ஏனைய உயிரினங்கள் அழிந்து விட்டால், மனித இனமும் விரைவில் முற்றாக அழிந்து போய்விடும் என்பதுதான் அறிவியலாளர்களின் கருத்தாகும்.

ஏனெனில் புவியில் உள்ள உயிரினங்கள் யாவும் ஒரு சங்கிலித் தொடர்பாக ஒன்றின் மீது மற்றொன்று தங்கியுள்ளன. ஒரு இனத்தை முற்றாக அழிக்க மனிதன் முற்பட்டால் உயிரினச் சங்கிலி துண்டிக்கப்பட்டு விடும். அதன் பாதக விளைவை மனித இனம் சந்திக்க வேண்டியிருக்கும்.

மனித-யானை மோதலை எடுத்துக் கொள்வோமானால், இதற்குக் காரணம் யானைகள் அல்ல. மனிதனின் செயற்பாடுகள்தான் இதற்குக் காரணமாகும். நிம்மதியாக வாழ்ந்த யானைகளின் வாழ்வில் மனிதன் மிக மோசமாகக் குறுக்கிடத் தொடங்கியதன் விளைவாகவே யானைகள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

இலங்கைக் காடுகளின் மொத்தப் பரப்பை எடுத்துக் கொள்வோமானால் அவை இப்போது அரைவாசிக்கு மேலாக அழிக்கப்பட்டு விட்டன. யுத்தம் நிலவிய காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதியில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டன. ஆனால் யுத்தம் நின்று போனதன் பின்னர் காடுகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கு, கிழக்கில் முன்னொரு காலத்தில் அடர்ந்த காடுகளாக விளங்கிய இடங்கள் இன்று வெட்டவெளிகளாகவே காணப்படுகின்றன.

வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டுள்ளன. இன்றும் அவை அழிக்கப்பட்டு வருகின்றன. தளபாடங்கள் மற்றும் வீடுகளை அமைப்பதற்கான தேவைகளுக்காக மரங்கள் வெட்டி அகற்றப்படுகின்றன. விறகுகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

இவை தவிர, காடுகளை அழித்து அவ்விடங்களில் வீடுகள் அமைக்கப்படுகின்றன. மலையகத்தின் சில பகுதிகளில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக காடுகளுக்குத் தீவைக்கும் காரியங்களும் இடம்பெறுகின்றன. நாம் எங்காவது நெடுந்தூரப் பயணம் மேற்கொள்கின்ற போது காடுகளுக்கு நேர்ந்துள்ள கதியை நன்றாக அழிந்து கொள்ள முடியும். சுமார் இரு தசாப்த காலத்துக்கு முன்னர் அடர்ந்த காடுகளாக இருந்த பகுதிகளெல்லாம் தற்போது மக்கள் குடிமனைப் பிரதேசங்களாக மாறியுள்ளன.

அடர்ந்த காடுகளே பிராணிகளின் வாழ்விடங்கள் ஆகும். பிராணிகளின் உயிரின சாகியமாக காடுகளே விளங்குகின்றன எனலாம். காடுகளை மனிதன் அழித்தால் பிராணிகள் வாழ்வதற்கு எங்கே செல்லும்? அவை உணவுக்காக எங்கே செல்லும்?

உயிரினங்கள் அத்தனையும் உலகில் நிலைத்திருப்பதற்கு தாவரங்களே அவசியமாகின்றன. தாவரங்களில் இருந்து தாவர உண்ணிகள் உணவைப் பெறுகின்றன. தாவர உண்ணிகளை வேட்டையாடி மாமிச உண்ணிகள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. இதனை நாம் உணவுச் சங்கிலி என்கிறோம்.

மனிதனால் காடுகள் அழிக்கப்படுவதால் தாவரஉண்ணிகளுக்கு உணவில்லாமலும் வாழ்விடம் இல்லாமலும் போகின்றது. அதன் விளைவாக காடுகளில் வாழ்கின்ற மாமிச உண்ணிகளுக்கும் உணவின்றிப் போகின்றது.

இதன் விளைவாக அப்பிராணிகள் வாழ்விடம் மற்றும் உணவுகள் இன்றி வெளியேறுகின்றன. அதனால் மனிதனுக்கு தீங்குகள் ஏற்படுகின்றன. யானை-மனிதன் மோதலுக்கான காரணமும் இதுவாகும்.

யானைகளில் இருந்து மக்களுக்கான பாதுகாப்பை ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க, காட்டுவிலங்குகளின் இருப்பைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைளும் அவசியமாகின்றன.

editor.tkn@lakehouse.lk

# கிராமம் கிராமமாக, வீடுவீடாக செல்லும் வேட்பாளர்கள்!




எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு விருப்பு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அநுராதபுரம் மாவட்டத்தில் தேர்தல் களம் நாளாந்தம் சூடுபிடித்து வருகின்றது.

அநுராதபுரம் மாவட்டத்தில் கலாவெவ, அநுராதபுரம் மேற்கு, அநுராதபுரம் கிழக்கு, கெக்கிராவ, மதவாச்சி, மிஹிந்தலை, ஹொரவப்பொத்தானை ஆகிய ஏழு தொகுதிகளை உள்ளடக்கி மொத்தம் 09 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இதற்காக பிரதான அரசியல் கட்சிகள் மும்முரமாக களத்தில் குதித்துள்ளன.

அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கிராமம் கிராமமாக, வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்தித்து கட்சி சார்ந்த வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் 09 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இம்முறை மொத்தம் 312 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பல்துறை சார்ந்தோர் போட்டியிடுகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 17 அரசியல் கட்சிகளும், 09 சுயாதீனக் குழுக்களும் போட்டியிடுகின்ற நிலையில், சுயாதீனக் குழுக்களின் ஆதிக்கத்தை தேர்தல் களத்தில் இதுவரை காண முடியவில்லை.

## அநுராதபுரம் மாவட்டத்தில் சூடுபிடிக்கும் தேர்தல் களம்

கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி 344,458 வாக்குகளைப் பெற்று 07 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 119,788 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

மூன்றாம் நிலையாக திகழ்ந்த தேசிய மக்கள் சக்தி 24,482 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 8,254 வாக்குகளையும் பெற்றுக் கொண்ட போதும், உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுடன் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை ஒப்பிடுகையில், வாக்காளர்களின் அதிகரிப்பினால் தேசிய மக்கள் சக்திக்கு வாக்குகள் அதிகரித்துள்ளன.

இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் 741,862 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், கடந்த 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை விட இம்முறை 48,288 வாக்குகள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**மதார் தம்பி ஆரிப்...**
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# இந்திய வெளியுறவு கொள்கைகள் விடயத்தில் எழுகின்ற கேள்விகள்!

கனடாவில் கொல்லப்பட்ட இந்தியாவின் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கு விவகாரம் தற்போது தீவிரம் அடைந்துள்ளது. கடந்த ஆண்டு இந்தக் கொலையில் இந்திய தூதரக அதிகாரிகளின் தலையீடு உள்ளது என்று குற்றம் சுமத்தினார் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ.

இந்தக் கருத்து காரணமாக இரண்டு நாடுகளிலும் இருந்த தூதரக அதிகாரிகள் வெளியேற்றப்பட்டனர்.

இந்தியா மற்றும் கனடாவின் உறவு இப்படி சிக்கல் மிக்கதாக இருக்க, காலிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற்பட்ட அமெரிக்க குடிமகனான குர்பத்வந்த் சிங் பன்னுவை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக, முன்னாள் இந்திய உளவுத்துறை அதிகாரி மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பாக இந்திய அரசு அதிகாரியான விகாஸ் யாதவ் மீது கொலைத்திட்டம் தீட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விகாஸுடன் இணைந்து திட்டம் தீட்டியதாக ஏற்கனவே இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 53 வயதான நிகில் குப்தா அமெரிக்காவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். விகாஸ் யாதவ் தற்போது தலைமறைவாக இருப்பதாக அமெரிக்கா தெரிவிக்கிறது.

ஒரே நேரத்தில் அமெரிக்கா மற்றும் கனடாவை இருவேறு விதங்களில் இந்தியா கையாளுவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அமெரிக்கா மற்றும் கனடா முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை இந்தியா கையாளும் விதத்தில் இரண்டு கோணங்கள் இருப்பதாக நிபுணர்கள் நம்புகின்றனர்.

கனடா முன்வைக்கும் குற்றச்சாட்டை இந்தியா கோபத்துடன் எதிர்க்கிறது. ஆனால் அமெரிக்கா சுமத்தும் குற்றச்சாட்டுகளை கையாளும் போது அந்த நாட்டுடனான உறவை மனதில் கொண்டு இராஜதந்திர ரீதியில் கையாளுகிறது.

கனடாவுடனான இந்தியாவின் உறவு மோசமான நிலையில் உள்ளது. இது மேலும் மோசமடையக் கூடும். கனடாவுடனான விவகாரத்தை சிறப்பாக இந்தியா கையாண்டு இருக்கலாம் என்பதே நிபுணர்களின் கருத்தாகும்.

பக்குவமாக இந்த விவகாரத்தை இந்தியா கையாண்டிருக்க வேண்டும் என்று பலரும் கருகின்றனர். கடந்த ஆண்டு ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவின் பெயரை நீக்கி இருந்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறனர். இந்தியாவின் பெயரை பயன்படுத்தியது இராஜதந்திர ரீதியிலான தீர்வாக அமையாது. ஜஸ்டின் வெளியிட்ட அறிக்கைகள் இந்த விவகாரத்தில் முட்டி மோதிக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதை உணர முடிகிறது. இராஜதந்திர ரீதியான மொழியில் அவரின் அறிக்கைகள் இல்லாத காரணத்தால் இந்தியாவின் பதிலும் அதே வகையில் அமைந்திருக்கிறது.

அதேநேரத்தில், இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையை இரண்டு நாடுகளும் பக்குவமாக கையாண்டுள்ளன.

கனடாவின் குற்றச்சாட்டுகளை கோபத்துடன் எதிர்க்கும் இந்தியா, அமெரிக்கா வைக்கும் குற்றச்சாட்டுகளை மென்மையாக கையாளுகிறது, ஒத்துழைப்பும் தருகிறது. அமெரிக்க நிர்வாகத்திற்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை இந்தியா வழங்குவதால், இவ்விரு நாடுகளுக்கும் இடையே எந்த விதமான பதற்றமும் எழவில்லை.

அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளையும் இந்தியா சமீபத்தில் எதிர்கொண்டது. ஆனால் அதற்கு மரியாதையுடனும் பக்குவத்துடனும் எதிர்வினையாற்றியது இந்தியா. அமெரிக்காவும் இதனை இராஜதந்திர முறையில் கையாண்டது. இந்தியாவும் அதற்கேற்ற வகையில் எதிர்வினையாற்றியது. கனடாவின் விவகாரம் முற்றிலும் மாறானது. குறிப்பாக இந்திய தூதரை அவர்கள் கையாண்ட விதம் முற்றிலும் வேறானது.

சவாலான ஒரு விவகாரத்தை அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் கையாண்டது. மற்றொரு புறம் கனடா இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகளுக்குப் பதிலாக மோதலைக் கையாண்டது. இந்திய விசாரணை முகமையால் (NIA) பட்டியலிடப்பட்ட பயங்கரவாதிகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியா நீண்ட காலமாக கோரிக்கை முன்வைத்து வருகிறது. ஆனால், கனடா இந்தக் கோரிக்கைகளுக்கு செவிமடுக்கவில்லை. திடீரென கோபமான ஒரு போக்கைக் கையாண்டு இரு நாட்டு உறவுகளுக்கும் இடையே பதற்றமான சூழலை உருவாக்கியுள்ளது.

ஆனால் இது ட்ரூடோ சம்பந்தப்பட்ட விவகாரம் மட்டுமல்ல. அந்த நாட்டில் வாழும் 30 இலட்சம் இந்தியர்கள் பற்றியது. அவர்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே இந்த விவகாரத்தை இந்தியா கொஞ்சம் சிறப்பாக கையாண்டிருக்கலாம் என்றும் அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

கனடா இந்தியா விவகாரத்தில் பயன்படுத்திய மொழியைப் போன்று வேறெந்த நாடும் பயன்படுத்தியதில்லை என்கிறார்கள் அவர்கள்.

இன்றைய சூழலில் இந்தோ_ பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இந்தியா இல்லாமல் இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் இந்த நாடுகள் எந்தவிதமான உத்திகளையும் கையாள இயலாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'எயார் இந்தியா' வெடிகுண்டு சம்பவத்துக்குப் பிறகு இரு நாட்டு உறவுகளும் மோசம் அடைந்தன. அதில் ஈடுபட்ட குற்றவாளிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க கனடா பல தருணங்களில் மறுத்துவிட்டது. பிரிட்டனிலும் தேடப்பட்டு வரும் நபர்களின் பட்டியல் இந்தியாவால் வழங்கப்பட்டது. ஆனால் பிரிட்டனும் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. கனடாவில் மட்டுமன்றி இங்கிலாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் இந்தப் பிரச்சினை பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுஒருபுறமிருக்க, இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை அங்கு வாழும் இந்தியர்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கட்சிகளின் கருத்துகளும் காலிஸ்தான் ஆதரவு செயற்பாட்டாளர்களின் கருத்துகளும் நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன.

கனடாவில் வாழும் இந்தியர்களின் நிலைமையும் தற்போது மாறியுள்ளது. அதிக அளவு சீக்கியர்களே முன்பு இருந்த சூழலில் தற்போது இதர சமூகத்தைச் சேர்ந்த இந்தியர்களும் அதிக அளவில் கனடாவில் வசிக்கத் தொடங்கியுள்ளனர்.

குஜராத், ஹரியானா மற்றும் இதர மாநிலங்களில் இருந்தும் மக்கள் இங்கே வருகின்றனர். தற்போது காலிஸ்தான் ஆதரவு போராட்டங்கள் நடப்பது போன்றே, அதனை எதிர்த்தும் போராட்டங்கள் இந்தியர்களால் நடத்தப்படுகின்றன. காலிஸ்தான் விரும்புகின்ற நபர்கள் அனைவரும் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்ற கருத்து தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் காரணமாக பங்களாதேஷ் மற்றும் இலங்கையுடனான உறவில் ஒரு இடைவெளியை இந்தியா கடைப்பிடிக்கிறது என்று பேசப்பட்டு வருகிறது.

நேபாளம், பாகிஸ்தானுடனான உறவு வழக்கம் போல் பிரச்சினைக்குரியதாகவே உள்ளது. தற்போது, அமெரிக்கா, கனடாவுடனான பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்தியாவின் வெளியுறவு தொடர்பான கேள்விகள் மீண்டும் எழுந்துள்ளன.

அண்டை நாடுகள் மத்தியில் சில சவால்களை இந்தியா சந்தித்து வருவதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது அவசியமாகும்.



## அமெரிக்காவுடன் உறவுகளை பக்குவமாக கையாளும் இந்தியா, கனடாவுடன் ஆத்திரமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது ஏன்?





# "உங்களுள் எவன் பெரியவனாக இருக்க விரும்புகிறானோ அவன் பணியாளனாய் இருக்கட்டும்" – இயேசு கிறிஸ்து

இயேசு தம் மக்களோடு இணைந்த நிலையில் தன் தலைமைக் குருத்துவத்தை வாழ்ந்ததுபோல, நாமும் நம்முடைய குருத்துவ அழைப்பை பிறருடைய துன்ப துயரங்களில் பங்குகொள்வதன் மூலம் வாழ்ந்து காட்ட வேண்டும்.

எங்கெல்லாம் துன்பம் துயரம், நோய் நோக்காடு, இன்னல் இடைஞ்சல், எளிமை ஏமாற்றம், தாழ்வு தனிமை, வேதனை வருத்தம் உள்ளதோ அங்கெல்லாம் நாமும் இருக்க வேண்டும். இதுவே குருத்துவ அழைப்பு.

வானங்களை எல்லாம் கடந்து: சென்ற கிறிஸ்து நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் சக்தி வாய்ந்தவர்.

கடவுளின் வலப்புறத்திலே அமர்ந்திருக்கும் அவர் கடவுளிடம் வல்லமையுள்ளவர். நமக்காகப் பரிந்து பேசுவதற்கெனவே என்றும் வாழ்கிறார். நாம் எத்தகைய பாவச்சேற்றில் அமிழ்ந்துவிடினும் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார் (1யோ. 2 : 1) என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு அவரைத் துணிவுடன் அணுகிச் செல்வோம்

இயேசு பன்னிரண்டு திருத்தூதர்களை அழைத்தார். அவர்களில் இருவர் யாக்கோபும், யோவானும். இவர்கள் நமதாண்டவருடன் 3 ஆண்டுகள் தங்கி, அவரது போதனையைக் கேட்டும், எல்லா மனிதர்களிடமும் காணப்படும் போட்டி, பொறாமை, பதவிஆசை என்ற பலவீனங்கள் இவர்களிடமும் காணப்பட்டன. இவற்றைத் திருத்தும் வகையில் அமைந்ததே இந்த ஞாயிறு நற்செய்தி.

யோவானும் யாக்கோபும் தாமே நேரில் இயேசுவிடம் பதவி கேட்டதாக மாற்கு குறிப்பிடுகிறார். ஆனால் மத்தேயு இவர்களின் தாய் சலோமி தன் மக்களுக்காக மன்றாடியதாகக் கூறுகிறார் (20 : 20 23). தன் சக திருத்தூதர்களின் பலவீனத்தை அம்பலப்படுத்த விரும்பாததால் மத்தேயு இப்படிக் கூறியிருக்க வேண்டும்.

திருத்தூதர்கள் புனிதர்களாகப் பிறக்காதது மட்டுமன்று, ஆண்டவருடன் வாழ்ந்த காலத்திலும் உலக கண்ணோட்டமும், உள்ளப் பேராசையும் நிறைந்தவர்களாகவே வாழ்ந்தனர் என்பதற்கு இந் நிகழ்ச்சி ஒரு சான்று.

"நீர் மாட்சிமையில் வீற்றிருக்கும் பொழுது எங்களில் ஒருவர் வலப்பக்கமும், மற்றவர் இடப் பக்கமுமாய் அமர அருள் புரியும்" என வேண்டினர்.

அப்பொழுது நமதாண்டவர் தான் குடிக்கும் கிண்ணத்தையும், தான் பெறவிருக்கும் திருமுழுக்கையும் குறிப்பிட்டு அதில் பங்கு பெறும் திடமனது உண்டா எனக் கேட்கிறார். மனித உருவிலே இறைவன் வந்தது பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு அன்று. தன்னையே



அழித்துக் கொள்வதன் வழியாக மக்களுக்கு மீட்பு வழங்கவே ஆகும்.

அவர் தந்தையின் பிரிய மகன் (மாற். 1 : 11) ; அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதே இவரது வாழ்வின் குறிக்கோள். இக்குறிக்கோள் கல்வாரியில் தான் முற்றுப்பெறும். தான் இறைவன் திருச்சித்தத்திற்குப் பணிந்து நடப்பதுபோல, தன் சீடர்களும் நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

கிண்ணம் இறைவனது கோபத்தையும் தண்டனையையும் குறிக்கும் (எரே. 25 :15,17). எனவே தான் துன்பங்கள், பாடுகளின் சின்னமாக கருதப்பட்டது.இதே பொருளில் தான் இயேசு இக் கிண்ணத்தை கெத்சமனித் தோட்டத்தில் கண்டார் (மாற். 14 : 23). நான் பெறவிருக்கும் திருமுழுக்கு என்பதும் நமதாண்டவர் படவிருக்கும் பாடுகளையும் மரணத்தையும் குறிக்கும். எனவே இயேசுவின் சீடனாக இருக்க விரும்புபவன், அவரது மரணத்திலும் பங்குகொள்ள விரும்புபவனாய் இருக்கவேண்டும். இந்த இரு திருத்தூதர்களிடம் தொடக்க நிலையில் உலகப் போக்குத் தென்பட்டாலும், அவர்கள் நாளடைவில் தெளிவு பெற்று இயேசுவுக்காக வேதனைகள் அனுபவித்து அவரது பாடுகளிலே பங்கு பெற்றனர்.

தங்களுக்கெனத் தனியிடம் வேண்டிய இந்த இரு திருத்தூதர்களைக் கண்டு ஏனைய சீடர்கள் பொறாமைப்பட்டனர். இவர்களுக்குப் பாடம் கற்பிக்கிறார் இயேசு. ஆள்பலம், அதிகார பலம் என்ற அடிப்படையில்தான் உலகம் ஒருவனை எடை போடுகின்றது. பிறவினத்தாரிடையே தலைவர்கள் ஆளுகின்றனர்; உங்களுள் எவன் பெரியவனாக இருக்க விரும்புகிறானோ அவன் பணியாளனாய் இருக்கட்டும்.மற்ற உயிர்களைத் தனது பணிக்காகப் பயன் படுத்துவதைவிட, தனது சேவையால் மற்றவர்கள் பயன் அடைய வேண்டும். முதன்மை பெற விரும்புப

**அருட்பணி சி.கே .சுவாமி**

வன் பணியாளனாகட்டும். இறுதி இராவுணவு வேளையில் தம் சீடர்களின் காலடிகளைக் கழுவுவதின் வழியாக இயேசு தன் போதனையைச் சாதனையாக்கினார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் திருமுழுக்கின் வழியாக இயேசுவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கு கொள்கிறான். மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவே வந்தார். இயேசு தம் மக்களோடு இணைந்த நிலையிலே தன் தலைமைக் குருத்துவத்தை வாழ்ந்ததுபோல,



நாமும் நம்முடைய குருத்துவ அழைப்பை பிறருடைய துன்ப துயரங்களில் பங்குகொள்வதன் மூலம் வாழ்ந்து காட்ட வேண்டும். எங்கெல்லாம் துன்பம் துயரம், நோய் நோக்காடு, இன்னல் இடைஞ்சல், எளிமை ஏமாற்றம், தாழ்வு தனிமை, வேதனை வருத்தம் உளவோ, அங்கெல்லாம் நாமும் இருக்க வேண்டும். இதுவே குருத்துவ அழைப்பு.

வானங்களை எல்லாம் கடந்து: சென்ற' கிறிஸ்து நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் சக்தி வாய்ந்தவர். கடவுளின் வலப்புறத்திலே அமர்ந்திருக்கும் அவர் கடவுளிடம் வல்லமையுள்ளவர். நமக்காகப் பரிந்து பேசுவதற்கெனவே என்றும் வாழ்கிறார். நாம் எத்தகைய பாவச்சேற்றில் அமிழ்ந்துவிடினும் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார் (1யோ. 2 : 1) என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு அவரைத் துணிவுடன் அணுகிச் செல்வோம்

யோவானும் யாக்கோபும் தாமே நேரில் இயேசுவிடம் பதவி கேட்டதாக மாற்கு குறிப்பிடுகிறார். ஆனால் மத்தேயு இவர்களின் தாய் சலோமி தன் மக்களுக்காக மன்றாடியதாகக் கூறுகிறார் (20 : 20 23). தன் சக திருத்தூதர்களின் பலவீனத்தை அம்பலப்படுத்த விரும்பாததால் மத்தேயு இப்படிக் கூறியிருக்க வேண்டும். திருத்தூதர்கள் புனிதர்களாகப் பிறக்காதது மட்டுமன்று, ஆண்டவருடன் வாழ்ந்த காலத்திலும் உலக கண்ணோட்டமும், உள்ளப் பேராசையும் நிறைந்தவராகவே வாழ்ந்தனர் என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்று.

"நீர் மாட்சிமையில் வீற்றிருக்கும் பொழுது எங்களில் ஒருவர் வலப்பக்கமும், மற்றவர் இடப் பக்கமுமாய் அமர அருள் புரியும்" என வேண்டினர். அப்பொழுது நமதாண்டவர் தான் குடிக்கும் கிண்ணத்தையும், தான் பெறவிருக்கும் திருமுழுக்கையும் குறிப்பிட்டு அதில் பங்கு பெறும் திடமனது உண்டா எனக் கேட்கிறார். மனித உருவிலே இறைவன் வந்தது பதவிகளைப் ஒவ்வொரு கிறிஸ்தவனும் திருமுழுக்கின் வழியாக இயேசுவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கு கொள்கிறான். இதைச் செயலில் காட்டுகின்றோமா? அவரைப்போல் பணி வாழ்வு, பலி வாழ்வு வாழ்கின்றோமா? இறை அரசைப் பரப்புவதில் என் பங்கென்ன? என் கடன் பணி செய்து கிடப்பது தானா? மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவே வந்தார்.




## புனித தெரேசாள் ஆலய வருடாந்த திருவிழா





கொழும்பு07, திம்பிரிகஸ்யாய புனித தெரேசாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் பங்குத்தந்தை சந்தன பெரேரா அடிகளாரின் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. வெஸ்பர்ஸ் ஆராதனை, திருப்பலி பூசை,திருச்சுரூப பவனியையும் படங்களில் காணலாம்.

படங்கள் உதவி: லெஸ்லி ஜொனதன்

## இயேசு கிறிஸ்துவை காட்சிகளில் காணும் பேறுபெற்ற தூய திரு இருதயத்தின் சீடர்

வாரம் ஒரு புனிதர்

# புனித மார்கரெட் மேரி

புனிதர் மார்கரெட் மேரி அலாகோக், பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த கத்தோலிக்க திருச்சபையின் அருட்சகோதரியும் மறை அருளாளருமாவார். இயேசுவின் திருஇருதய பக்திக்கு தற்போதைய வடிவம் கொடுத்தவர் அவரே.

இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தால் அடையாளப்படுத்தப்பட்ட கடவுளின் அன்பை உணர்த்துவதற்காக திருச்சபையை தூண்டுவதற்காக கிறிஸ்து இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவராவார்.

மார்கரெட் மரியா, கி.பி. 1647ம் ஆண்டு ஜூலை 22ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் பர்கண்டி,லாட்டகொர் என்ற இடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் புண்ணிய வாழ்வில் சிறந்து விளங்கியவர்கள். கிளாட் மற்றும் பிளிபெர்ட் ஆகியோரின் ஒரே மகளான மார்கரெட், சிறு வயது முதலே திவ்விய நற்கருணை



யில் இருக்கும் ஆண்டவர் இயேசுவின் மீது அதிக பக்தி கொண்டிருந்தார்.

இயேசுவோடு அமைதியில் பேசுவது இவரது வழக்கமாக இருந்தது. இவர் முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட போது, மரியன்னையின் உதவியால் குணமடைந்தார். இதற்கு நன்றியாக துறவற சபை ஒன்றில் சேர்ந்து கன்னியராக விரும்பினார்.

**கிறிஸ்து இயேசுவின் திருக்காட்சிகள் :**

கி.பி. 1671ம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி மார்கரெட் தனது 24ஆம் வயதில் பரே நகரிலுள்ள விசிட்டேசன் துறவற சபையில் இணைந்தார். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தனது துறவற உடைகளைப் பெற்றுக் கொண்டார். 1672ஆம் ஆண்டு இவர் கன்னியருக்கான இறுதி வாக்குறுதிகளை உச்சரித்தார்.

அந்த துறவற மடத்தில் மார்கரெட் திவ்விய நற்கருணை முன்பாக அதிக நேரம் செலவிட்டார். இயேசு கிறிஸ்துவின் பல காட்சிகளை காணும் பேறு மார்கரெட் மரியாவுக்கு கிடைத்தது. பலமுறை இயேசுவின் வேதனையுற்ற உருவத்தை இவர் காட்சியாக கண்டுள்ளார்.

கி.பி. 1673ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி இயேசு கிறிஸ்து அன்புத் தீ பற்றி எரியும் இதயத்துடன் முதல் முறை மார்கரெட்டுக்கு காட்சியளித்து, தனது திரு இதயத்தின் பக்தியைப் பரப்பும் திருத்தூதராக இவரைத் தேர்ந்து கொண்டார்.

அதன் பிறகு பதினெட்டு மாதங்கள் வரை இயேசு இவருக்கு பலமுறை காட்சி யளித்தார். இயேசு இறப்பதற்கு முந்திய நாள் கெத்சமனித் தோட்டத்தில் அனுபவித்த மரண வேதனையை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு வியாழனும் இரவில் திருமணி ஆராதனை மேற்கொள்ளுமாறு இயேசு இவரிடம் கூறினார்.

மார்கரெட் இயேசுவின் திரு இருதய பக்தியைப் பரப்ப ஆர்வமுடன் உழைத்தார். மாதத்தின் முதல் வியாழக்கிழமை இரவு 11மணி முதல் 12மணி வரை நற்கருணை ஆராதனை செய்தல், முதல் வெள்ளிக்கிழமை திருப்பலியில் பங்கேற்று திவ்விய நற்கருணை உட்கொள்ளுதல் போன்ற பக்தி முயற்சிகளையும் இயேசு இவர் வழியாகக் கற்றுக்கொடுத்தார்.

இயேசுவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவைத் தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை அன்று இயேசுவின் திருஇதயப் பெருவிழா கொண்டாடப்பட வேண்டுமென்றும் மார்கரெட் மூலம் இயேசு கிறிஸ்து அறிவுறுத்தினார்.

தொடக்கத்தில் மார்கரெட் கண்ட காட்சிகளை நம்ப பலரும் மறுத்தனர்.



அவ்வேளையில் இவரது சபையின் ஒப்புரவாளராக இருந்த புனிதர் கிளாட் தெ லா கொலம்பியர் இவரது காட்சிகளின் உண்மைத் தன்மையை முதன்முதலில் ஏற்று அறிக்கையிட்டார்.

அதன்பின், இவரது சபையைச் சார்ந்த மற்ற அருட்சகோதரிகள் அக் காட்சிகளை ஏற்றுக்கொண்டனர். கி.பி. 1686ஆம் ஆண்டு, அந்த துறவற மடத்தில் தனிப்பட்ட விதத்தில் முதல்முறையாக இயேசுவின் திருஇருதயத்திற்கு விழா கொண்டாடப்பட்டது, இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு இயேசுவின் திருஇருதயத்தின் பெயரால் அங்கு ஒரு சிற்றாலயமும் எழுப்பப்பட்டது.

கிறிஸ்துவைப் பலமுறை காண பேறு பெற்ற மார்கரெட் மரியா, அவரை நிரந்தரமாகக் காண கி.பி. 1690ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்17ஆம் திகதி விண்ணகம் சென்றார். திருஇதய பக்தி பற்றி மார்கரெட் எழுதிய குறிப்புகள், கி.பி. 1698ம் ஆண்டு ஜெக்ரோய்செட் என்பவரால் இயேசுவின் திருஇதய பக்தி என்ற பெயரில் புத்தகமாக வெளியிடப்பட்டன. மார்கரெட் இறந்து 140 ஆண்டுகள் கழித்து கி.பி.1830ம் ஆண்டு, இவரது கல்லறை தோண்டப்பட்ட வேளையில், அழியாத நிலையில் இருந்த மார்கரெட் மரியாவின் உடல் வெளியே எடுக்கப்பட்டது. அப்போது இரண்டு அதிசயங்களும் நடைபெற்றன.

**எல்.எஸ்.**

## உலக மறைபரப்பு ஞாயிறு

மறை பணி என்பது திருப்பலி மற்றும் நற்செய்தியில் வேரூன்றப்பட்டதாகவும் உடன்பிறந்த உணர்வுகொண்ட நல்லிணக்கத்தில் ஊன்றியதாகவும் இருக்கவேண்டும்.

ஆண்டவரின் விருப்பத்திற்குத் திறந்த மனதுள்ள ஒரு மறை பணியாளராக, கிறிஸ்துவின் சகோதர சகோதரியாக வாழ்வது என்பது, திருப்புகழ்மாலை மற்றும் திருப்பலியை நிறைவேற்றுவதில் வேரூன்றப்பட்டுள்ளது.

குழு செபம், உடன்பிறந்த உணர்வு நல்லிணக்கக் கலாசாரத்தை வழங்குகின்றது என்பவை திருத்தந்தை பிரான்சிஸ் மறை பணிக் குறித்து வலியுறுத்தும் கருத்துக்களாகும்.97வது உலக மறைபரப்பு ஞாயிறுக்கான கருப்பொருளாக 'பற்றியெரியும் இதயங்கள்... நகர்ந்து செல்லும் கால்கள்' என்ற தலைப்பை அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் அன்புத் தீயில் பற்றியெறியாமல் ஒருவர் உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றி எல்லோரிடமும் அறிவிக்க



இயலாது என்பதே இக் கருப்பொருளின் மையக்கருத்து.

மறைபரப்பு பணிக்கு இருவர் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். ஒருவர் அக்டோபர் மாதம் முதல் திகதியன்று நாம் கொண்டாடிய குழந்தை இயேசுவின் புனித தெரேசா மறைபரப்புப் பணிகளின் காவலர் என்ற பெருமைக்குரியவர்.

தான் இருந்த இடத்திலே இருந்து கொண்டு இயேசுவின் போதனைகளை அறிவித்தவர்; மற்றொருவர் பாரிஸ் நகரில் இருந்த பற்பே பல்கலைக்கழகத்தில் பதவி நாற்காலிக்கு ஆசைப்படாமல் தனது சொந்த நாட்டையும், வீட்டையும், விட்டு



பல்லாயிரம் மைல்கள் பயணம் செய்து கிறிஸ்துவை பல கோடி மக்களுக்கு அறிமுகம் செய்த பிரான்சிஸ் சவேரியார்.

புனித சவேரியார் தன் போதனைகளால் பல்லாயிரம் உள்ளங்களை இறைவனிடம் அழைத்து வந்ததுபோல் புனித குழந்தை இயேசுவின் தெரேசா தன் செபங்களால் பல்லாயிரம் மனங்களை இறைவனிடம் கொணர்ந்தார். மறைபரப்புப் பணியில், இறைவனைப் பறைசாற்றுதல் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் இறைவனை நோக்கி எழுப்பப்படும் செபங்களும் முக்கியம் என்பதை நாம் ஆழமாக உணர்ந்து கொள்ள வேண்டும். மறைபரப்பு பணிக்கு முதலில் ஜெபம் முக்கியம் அதற்கு அடுத்தாற்போல் நாம் கற்றுக்கொண்ட இயேசுவின் போதனைகளை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பது மிகவும் முக்கியம்.

இயேசுவின் மறைபரப்பு பணி என்பது இரண்டு இலட்சியங்களை அடிப்படையாக கொண்டது. ஒன்று புனித குழந்தை தெரசம்மாளைப் போன்று நான்கு சுவர்களுக்கு மத்தியில் செபம் என்ற ஆயுதத்தால் இயேசுவின் போதனைகளை வாழ்வாக்குவது. மற்றும் பிறருக்கு அதனை மகிழ்வுடன் எடுத்துரைப்பது.

இயேசு நம் இதயங்களை நமக்குள் பற்றி எரியச் செய்வாராக; அவருடைய தூய ஆவியாரிடமிருந்து வரும் வல்லமையினாலும் ஞானத்தினாலும் அவருடைய மீட்பின் மறையுண்மைகளை நாம் உலகுக்கு அறிவிக்கும்படி, அவர் உள்ளங்களை ஒளிரச்செய்வாராக!

**மெரினா ராஜ்**



கொழும்பு, அளுத்மாவத்தை ஐயப்பன் அறநெறிப் பாடசாலையில் வாணிவிழா நடத்தப்பட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையில்...

உள்ளடக்கிய அறிக்கை. இதனால்,சம்பந்தப்பட்ட குழுக்கள் மீது நம்பிக்கையில்லாமல் இருக்கலாம்.

குழுக்களின் இரகசிய தன்மையிலும் அதேபோன்று அந்த குழுக்களின் அறிக்கைகள் மீதும் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். நேர்மைத் தன்மை தொடர்பிலும் நம்பிக்கை இல்லாதிருக்கலாம்.

இவை அனைத்தையும் நோக்கும் போது, அந்த குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது.

அதனால், சுற்றி இருப்பவர்கள் என்ன தாளம் போட்டாலும் எமக்கு பிரச்சினையில்லை.

அன்று முதல் ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் அதனை வைத்து, ஒரு சதமாயினும் நாம் சம்பாதித்திருந்தால் அதனை வைத்து எந்த சிறப்புரிமைகளையும் நாம் பெற்றிருந்தால் அதனை ஆதார பூர்வமாக ஒப்புவிக்க வேண்டும்.

நாம் ஒருபோதும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரை வைத்து இலாபம் தேடவில்லை. அதற்கான பதிலைத் தேடுவதே எமது நோக்கமாக இருந்தது.

தற்போது சிலர் உள்ளனர். அவர்கள் இந்த பிரச்சினை தொடர்பில் பதில் தேடுவதற்கு எதிரானவர்கள். அவ்வாறு இரு தரப்பினர் காணப்படுகின்றனர். ஒரு தரப்பினர் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள். அதற்கு நிதி வழங்கியவர்கள் இதற்கு எதிரானவர்கள். இதற்கு பதில் கிடைத்தால் இவர்கள் சிறைக்குச் செல்ல வேண்டி வரும். தண்டனை கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இரண்டாவது தரப்பினர் ஈஸ்டர் தாக்குதலை வைத்து வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டவர்கள். சில சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொண்டவர்கள். அரசு சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்றுக் கொண்டவர்கள் என அவர்களும் இதற்கு எதிரானவர்கள். அந்த வகையில் ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கு பதில் கிடைக்குமானால், ஐந்து வருடங்கள் அதை வைத்து பிழைத்தவர்களுக்கு இப்போது வருமான மார்க்கம் இல்லாமல் போகும். அவ்வாறு இந்த இரண்டு தரப்பினருமே ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு பதில் தேடுவதற்கு எதிரானவர்கள். குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை கிடைப்பதற்கு அவர்கள் எதிரானவர்கள்.

இந்தப் பிரச்சினையை அடுத்து வரும் அரசாங்கத்திற்கும் கொண்டு செல்ல முடியாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியே ஆட்சிக்கு வந்தது. அடுத்து வரும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு தீர்வு காணப்படும் என்ற பதத்தை உள்ளடக்க முடியாது. அந்த வகையில் நாம் தற்போதைய ஜனாதிபதியை நம்புகின்றோம். தேசிய மக்கள் சக்தியை நம்புகின்றோம். பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சரையும் பொலிஸ்மா அதிபரையும் சானி அபேசேகரவையும் நாம் நம்புகின்றோம்

சாணி ஒருபோதும் அரசியல் செய்தவர் அல்ல. அவர் இந்த நாட்டில் பெரும் குற்றங்களுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியவர்.

அதனால் அவர் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டே வீட்டுக்கு அனுப்பப்பட்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை...

விசாரணைக் குழு அறிக்கைகளை வெளியிடுவதற்காக ஜனாதிபதிக்கு நேற்றுக் காலை 10.00 மணி வரை கால அவகாசம் வழங்குவதாக உதயகம்மம்பில ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

அதன்படி இரண்டு அறிக்கைகளில் ஒன்றை நேற்றும் மற்ற அறிக்கையை எதிர்வரும் திங்கட்கிழமையும் வெளியிடவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையை வெளிப்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் தயங்கியமைக்கான காரணத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு 2019 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஓய்வுபெற்ற நீதியரசர் ஜனக் டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபயவிடம் 2021 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டதுடன் அப்போதே அந்த அறிக்கையும் வெளியிடப்பட்டது.

அது கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு வழங்கப்பட்டதுடன், பாராளுமன்ற வாசிகசாலையிலும் வைக்கப்பட்டது.

அதேவேளை,செனல் 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட 25 குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற நீதியரசர் எஸ்.ஐ. இமாம் தலைமையிலான இந்த குழுவின் அறிக்கை 2024 ஜூன் மாதம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் பொலிசார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் குறைபாடுகளைக் கண்டறிய ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.என். ஜே. டி அல்விஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு கடந்த செப்டம்பர் 14 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அதன் அறிக்கையைக் கையளித்தது.

அந்த அறிக்கையின் 40 ஆவது பக்கத்தில், சஹ்ரானின் தாக்குதல் தொடர்பில் சர்வதேச புலனாய்வு அமைப்புகளால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அப்போதைய பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவுக்கு அரச புலனாய்வு சேவையினால் அறிவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி குறித்த கடிதம் அவரது மேசைக்கு வரும்போது, அவர் வெளிநாட்டிலிருந்ததாகவும் 16 ஆம் திகதியே கடிதத்தைப் பார்த்ததாகவும் அவர் தமது டயரியில் பதிவு செய்துள்ளார்.

அத்துடன், அவர் வெளிநாட்டிலிருந்தபோது பதில் கடமைகளைப் பிரதிப் பொலிஸ் அதிபர் நாகஹமுல்ல வகித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தனி நபர் கம்பனியாக...

இருந்தேன். கட்சிக்கு வரும் வழக்குகளுக்கும் நான் ஆஜராகியிருந்தேன். அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரது வழக்குகளிலிருந்து, இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளின் வழக்குகளில் ஆஜராகியுள்ளேன். வாதாடிய வழக்குகளில் எவருமே சிறை செல்லவில்லை.

இலங்கை தமிழ் அரசு கட்சி, தற்போது ஒரு தனி நபருடைய கம்பனியாக மாறியிருக்கிறது. அந்நபர் சர்வாதிகாரமிக்க நிலையில் செயற்படுவதற்கு தலைமைத்துவமும், சம்பந்தரும் காரணமாக உள்ளனர். கட்சிக்குள் இருந்த அனைவரையும் விலக்கிவிட்டு தனது தனியான கட்டுக்கோப்புக்குள் கட்சியை வைத்திருக்கிறார் சம்பந்தன்.

தலைவர் தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்றிருந்தார். ஆனால், அவருக்கு அப்பதவி வழங்கப்படவில்லை. இதனால்,நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது.

தமிழ் தேசியம்தான், தமிழ் அரசுக் கட்சியின் தாரக மந்திரம். எமது தமிழ் தேசியம் பாதுகாக்கப்பட வேண்டும்.நாங்கள் இல்லாவிட்டாலும்,அடுத்த தலைமுறையிடமாவது இதனை ஒப்படைத்துச் செல்ல வேண்டும். தமிழ் அரசுக் கட்சிக்குள் இது நடைபெறவில்லை.கட்சிக்குள் இத்தனை பேர் இருந்தும் ஏன் எதனையும் செய்யவில்லை என, நீங்கள் கேட்கக்கூடும். கட்சிக்குள் இருந்தவர்களிடம் பதவி மோகங்களே இருந்தன.மாகாண சபை தேர்தலில் முதலமைச்சராவது யார், அமைச்சர்களாவது யார், பிரதேச சபை த் தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் யார் என்பதே இவர்களின் பிரச்சினை. இவ்வாறான சூழ்நிலையில் தான் கட்சியை நடத்த முடியாது என நான் வெளியேறி வந்தேன்.

கட்சியின் செயலாளர் பதவியை சுமந்திரன் கோரினார். ஆனால், அவருக்கு அப்பதவி மறுக்கப்பட்டது. இதையடுத்து, நாங்கள் இரண்டு அணி எனக் கூறினார் சுமந்திரன். இப்போது தேர்தல் வந்துள்ளதால் நாங்கள் ஒரு அணி எனக் கூறுகின்றார்.

## வடக்குக்கான ரயில்...

நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த செயற்பாடுகளை முழுமையாக பூர்த்தி செய்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல், வடக்குக்கான ரயில் சேவையை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே வேளை,நேற்று பரீட்சார்த்த சேவை ஒன்று நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையான வடக்கு ரயில் பாதையில், மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான பகுதி புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

அந்த வகையில் இந்த ரயில் பாதையில் நேற்று முதல் ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி காரணங்களுக்காக நேற்றைய தினம் பரீட்சார்த்த ரயில் சேவை ஒன்று மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் மணித்தியாலத்துக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்கக்கூடிய வகையில், வடக்குக்கான ரயில் பாதை நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திருத்தப் பணிகள் காரணமாக கொழும்பு கோட்டையிலிருந்து மஹவ வரை மாத்திரமே தற்போது ரயில் சேவைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல்; திரிபுபடுத்தப்பட்ட...

குறித்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

புதிய அறிக்கைகளில் அரசாங்கத்தின் தற்போதைய அறிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசாங்கம் இந்த பரிந்துரைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நாம் இந்த இரண்டு அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போதைய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

அவர் அதனை நிறைவேற்றுவார் என கத்தோலிக்கத் திருச்சபை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 50 துப்பாக்கிகளே...

அமைச்சு அறிவித்திருந்தது. குறித்த திகதிக்கு முன்னர் அனைத்து துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் கையளிக்கப்பட வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகளை மீள கையளிக்காவிட்டால் 1916ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின்படி சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

### (22.10.2024)



ஸ்ரீமதி. பாரதி ஸ்ரீதர்.
பிரபல எண் சோதிட நிபுணர், தமிழ்நாடு

**மேஷம்:**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்களும் வந்து இணைவர். நினைத்த காரியங்களை தீவிர முயற்சியுடன் செய்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் வருகையும் அவர்களால் பொருளாதார முன்னேற்றமும் உண்டு.

**மிதுனம்:**
சொந்தத் தொழிலில் பரபரப்பாக வேலை நடைபெறும். ஓய்வின்றி உழைப்பீர்கள். எதிர்பார்க்கும் பணம் கைக்கு வந்து சேரும்.

**கடகம்:**
உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சுமூகமாக நடந்து கொள்வீர்கள். வெளிநாட்டு தகவலில் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:**
அவசரமாக செய்து முடிக்க வேண்டிய காரியங்களை திட்டமிடுவீர்கள். முக்கிய நண்பர்களின் துணை கொண்டு கடினமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:**
பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். சகல விடையங்களிலும் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்:**
அலுவலகத்தில் தங்கள் எதிர்பார்ப்புகளை அடைவதில் சிக்கல் ஏற்படலாம். செய்யும் காரியங்களில் கவனமும் நிதானமும் தேவை.

**விருச்சிகம்:**
வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானமான முடிவை எடுங்கள்.

**தனுசு:**
சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் ஆதாயம் கிடைக்கும். வரவேண்டிய தன வரவுகள் தாமதம் இல்லாமல் வந்து சேரும்.

**மகரம்:**
எதிர்பார்க்கும் பண வரவு குறித்த காலத்தில் வந்து சேரும். எதிர்பார்த்திருந்த கடன் உதவியும் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:**
எதிர்பார்த்த பண வரவும் அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பெறும். முயற்சியுடன் செயல்பட்டு காரியங்களில் வெற்றி அடைவீர்கள்.

**மீனம்:**
அனேக காரியங்களில் தீவிரமாக முயற்சி செய்தாலும் சில வற்றிலேயே எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்

## வெளிவிவகார அமைச்சு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பல வருடங்களாக பலஸ்தீன மக்களுடன் இலங்கை ஒற்றுமையை வெளிப்படுத்தி வருகிறது. காசாவின் தற்போதைய மோசமான மனிதாபிமான நிலைமை குறித்து, பல பலதரப்பு மன்றங்களில் இலங்கை தீவிர கவலைகளை தெரிவித்தது. உடனடி போர் நிறுத்தத்திற்கான அழைப்பையும் இலங்கை ஆதரித்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கட்டாய மற்றும் அத்தியாவசியமான மனிதாபிமான முயற்சிகளுக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

அண்மையில் தெற்கு லெபனானில் உள்ள நகோராவில் உள்ள UNIFIL இன் தலைமையகம் பாதிக்கப்பட்டு, இரண்டு இலங்கை அமைதி காக்கும் படையினர் காயமடைந்ததை இலங்கை வன்மையாகக் கண்டித்தது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஒக்டோபர் 14 கொழும்பில் உள்ள இராஜதந்திரப் படையணிக்கு வழங்கிய அறிக்கை, ஐ.நா ஊழியர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான கடப்பாட்டை நிலைநிறுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

ஐ.நா. 1968 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானம் 2443 மூலம் நிறுவப்பட்ட பலஸ்தீனிய மக்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களின் பிற அரேபியர்களின் மனித உரிமைகளை பாதிக்கும் இஸ்ரேலிய நடைமுறைகளை ஆராய்வதற்கான ஐ.நா சிறப்புக் குழுவிற்கு இலங்கை தலைமை தாங்குகிறது.

இதன்படி, செயலாளர் நாயகத்தை மட்டுமல்ல ஐ.நாவின் ஆணையை பாதுகாக்கும் கடிதத்தையும் இலங்கை முழுமையாக ஆதரிக்கிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடவுச்சீட்டு விநியோகம்...

அதிகளவு கடவுச்சீட்டுகளை விலை மனுக்கோரல் நடைமுறையின் மூலம், கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.இதனால் அது தொடர்பான தீர்ப்பு கிடைத்தவுடன் ஈபாஸ்போர்ட் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். எவ்வாறாயினும், நேற்று முதல் கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சி.ஐ.டி.யிடம் ஒப்படைக்கப்பட்ட...

விசாரணைகளில் தெரியவந்துள்ளது.அவரிடமிருந்த துப்பாக்கியாலேயே,சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இம்மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு, குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## நிராகரிக்கப்பட்ட வன்னி...

சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன, மன்றில் இது குறித்த விடயங்களை முன்வைத்தார்.

இந்த மனுவின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்குப் பின்னர், இது குறித்து மேலதிக விடயங்களை முன்வைக்க திகதியை கோரினார்.

இதற்கமைவாக , சம்பந்தப்பட்ட மனு இன்று (22) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பரராஜசிங்கம் உதயராசா மற்றும் இரண்டு வேட்பாளர்களினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில்,பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, வன்னி மாவட்ட தேர்தல் தெரிவட்தாட்சியதிகாரியிடம் வேட்பு மனுவை சமர்ப்பித்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். வேட்புமனுவை முறையாக சமர்ப்பிக்கவில்லை எனக்கூறி அவர், அதனை ஏற்க மறுத்து நிராகரித்திருப்பதாகவும் மனுதார் தெரிவித்துள்ளார்.

அனைத்து ஆவணங்களையும் முறையாக சமர்ப்பித்த போதும், மாவட்ட தேர்தல் தேர்தல் தெரிவட்தாட்சியதிகாரி அதனை நிராகரித்தார்.இவரின் இந்த முடிவு செல்லாதென ஆணை பிறப்பிக்க கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும்,வன்னி மாவட்ட பொதுத்தேர்தல் வாக்கெடுப்பை எதிர்வரும் நவம்பர் (14) நடாத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும், இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை இடைக்காலத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்க வேண்டும் எனவும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

# களனிப் பல்கலைக்கழக வெகுஜன தொடர்பாடல் கற்கைகள் பிரிவின்"சுவத்ரா" சுகாதார முகாம்



களனிப் பல்கலைக்கழக வெகுஜன தொடர்பாடல் கற்கைகள் பிரிவின் தொடர்பாடல் மற்றும் மக்கள் தொடர்பாடல் உயர்தர டிப்ளோமா பாடநெறியின் 5வது குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "சுவத்ரா" சுகாதார முகாம் இரத்தினபுரி, எரத்ன லஸ்ஸகந்த ஸ்ரீ சமந்தபத்ரா ராம விகாரையில் (அக்டோபர் 19) நடைபெற்றது. குருவிட்ட பிரதேச செயலகம், குருவிட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் , இலங்கை கண் மருத்துவ சங்கம், சிப்லா பார்மா லங்கா நிறுவனம், ஹெல்ப்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனம் போன்றவற்றின் ஆதரவுடன் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுகாதார முகாமில் கண் பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்குதல், தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு பேருக்கு கான்டாக்ட் லென்ஸ்கள் வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு, ரத்த சர்க்கரை பரிசோதனை, கொலஸ்ட்ரால் பரிசோதனை, நுரையீரல் பரிசோதனை போன்ற இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

# பொதுத் தேர்தல் திகதி அரசியலமைப்புக்கு முரணானது சிவில் அமைப்பின் செயற்பாட்டாளர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பொதுத் தேர்தலை நவம்பர் (14) நடத்துவது அரசியலமைப்புக்கு முரணானதெனத் தீர்ப்பளிக்கக் கோரி, உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் அமைப்பின் செயற்பாட்டாளரும் "நாம் இலங்கை தேசிய அமைப்பின்" இணைப்புச் செயலாளருமான எச். எம். பிரியந்த ஹேரத்,நேற்று இந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் ஆகியோரும் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான திகதி ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்கள் சட்டத்தின்படி, ஐந்து வாரங்களுக்கு குறையாமலும், வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த நாளிலிருந்து ஏழு வாரங்களுக்கு மிகையாகாமலும் வாக்குப்பதிவுக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இதன்படி, வேட்புமனு ஏற்கும் பணி முடிவடையும் ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் நிறைவடையும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நவம்பர் 14ஆம் திகதி, அந்த சட்டக் காலப்பகுதியில் உள்ளடக்கப்படாததால், அன்றைய தினம் பொதுத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தவறு தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்த போதும், அதனால் பயன்கிட்டவில்லை என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிகாரத்திலிருந்த எவரும் பொத்துவில் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வில்லை

*(பாலமுனை விசேட நிருபர்)*



சர்வதேச ரீதியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொத்துவில் பிரசேத்தின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தவுள்ளதாக,ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் அமான் அஸீஸ் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடைபெறப்போகும் பாராளுமன்ற தேர்தலில் எனது வெற்றிக்கு இப்பிரதேசம் பூரண ஒத்துழைப்பு வழங்கும். இந்த நம்பிக்கை எனக்குள்ளது.

உலகலாவிய ரீதியில் புகழ்பெற்ற ஒரு பிரதேசமாக பொத்துவில் காணப்படுகிறது. உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தினமும் இங்குள்ள அறுகம்பே பிரதேசத்துக்கு வந்து செல்கின்றனர். இருந்தாலும் இந்த பிரதேசம் அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிக் காணப்படுகிறது.

குறிப்பாக இங்கு காணிப்பிரச்சினை, குடிநீர் பிரச்சினை என ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. அறுகம்பே சுற்றுலா பிரதேசம் நவீன வகையில் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

அங்குள்ள வீதிகள் மிகவும் மோசமாகக் காணப்படுகின்றன. பொத்துவிலில் ஒரு பொது விளையாட்டு மைதானமில்லை. தனியான கல்வி வலயம் குறித்து வருடக்கணக்கில் பேசுகிறார்கள். ஆனால், ஒன்றும் நிறைவேற்றப்பட்டதாக தெரியவில்லை.

இந்த ஊரினுடைய தேவைகளையும் மக்களுடைய பிரச்சினைகளையும் நிறைவேற்றுவதாக கூறி அரசியல் அதிகாரத்தினை பெற்றவர்கள், அதில் எவற்றினையும் நிறைவு செய்ததாக தெரியவில்லை. ஊரினதும் மக்களுடையதும் பிரச்சினைகள் அப்படியே இருக்க அரசியல்வாதிகள் மாத்திரம் சுகபோகம் அனுபவித்தனர்.

எனது தந்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.பி.ஏ.அஸீஸ் பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் பாசறையில் வளர்ந்தவர். அவர் பொத்துவில் பிரதேச மக்களின் தேவைகளையறிந்து சேவையாற்றிய ஒரு மனிதர். அவருடைய மறைவுக்கு பின்னர் இந்தப் பிரதேசத்தில் ஒரு சரியான அரசியல் தலைமை இல்லை.இவ்வாறான நிலையில் பொத்துவில் மக்களின் அழைப்பினை ஏற்று இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகிறேன்.

# சிங்கபுர வர்த்தகரின் வீட்டில் நடந்தவை கொலை, தற்கொலைகள்

## பொலிஸாரின் விசாரணைகளில் அம்பலம்

சிலாபம் சிங்கபுர பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற சம்பவம், கொலை மற்றும் தற்கொலை என சிலாபம் பொது வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேதப் பரிசோதனையிலிருந்து தெரியவந்துள்ளது.

சிலாபம் பொது வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி இலங்கரத்ன பண்டாவினால்,இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இப்பிரேத பரிசோதனையில் சம்பவத்தில் இறந்த இரண்டு பெண்கள் கழுத்து அறுத்து கொல்லப்பட்டும் மற்றும் தீயில் குதித்து கருகி தந்தை உயிரிழந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சிலாபம் சிங்கபுர பகுதியில் , இரண்டு மாடி வீட்டில் கடந்த (20) அதிகாலை தீப்பிடித்து எரிந்ததில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகள் உயிரிழந்துள்ளமை தொடர்பிலேயே இந்த மரண விசாரணை நடைபெற்றுள்ளது.

இது கொலையா? அல்லது தற்கொலையா? என சிலாபம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பல விடயங்கள் வௌி வந்துள்ளன.

நடத்தப்பட்ட விசாரணையில்,உயிரிழந்த வீட்டு உரிமையாளர் மீது சந்தேகம் எழுந்துள்ளது.சிலாபம் பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் இந்த சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக இது இரட்டை கொலை மற்றும் தற்கொலை எனவும் தெரியவந்துள்ளது.

# கெஹலியவின் வீட்டுக்கு முன்னால் மலர்வளையம் வைத்த சம்பவம்

## மூல காட்சிகளை கோருகிறது நீதிமன்றம்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் கொழும்பு 07 உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பாக வைத்தியர் சங்கத்தினர் மலர் வளையம் வைத்த சம்பவம் தொடர்பான, திருத்தப்படாத காணொளி காட்சிகளை கறுவாத் தோட்ட பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்று (21) உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரின் வீட்டிற்கு முன்னால், மலர் வளையம் வைத்து அச்சத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் வைத்தியர் சங்கத்தின் தலைவர் டொக்டர் சமல் சஞ்சீவ

விசாணைக்கு அழைக்கப்பட்டார். இந்த விசாரணையிலே,இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அழைக்கப்பட்ட போது, சந்தேகநபர் சமல் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். கறுவாத்தோட்ட பொலிஸார் விடயங்களை முன்வைத்தனர். பல தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்பட்ட காட்சிகளை வழங்கியதாகவும், ஆனால் திருத்தப்படாத காட்சிகள் வழங்கப்படவில்லை எனவும், கறுவாத் தோட்ட பொலிஸார் குறிப்பிட்டனர். திருத்தப்படாத காட்சிகளை சட்டமா அதிபருக்கு வழங்கி சட்ட ஆலோசனையை பெற வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மார்வின் சில்வா ஆஜரானார். அரசியல் காரணங்களை முன்னிறுத்தி இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதால், இது தொடர்பான காணொளிகளை பார்வையிட்டு தனது வாடிக்கையாளரை விடுவிக்குமாறு சட்டத்தரணி நீதிமன்றில் கோரினார்.

இரு தரப்பு விடயங்களையும் கவனத்தில் கொண்ட நீதவான், சம்பந்தப்பட்ட காணொளிகளை பார்வையிட்ட பின்னர் போதிய ஆதாரங்கள் இல்லாவிட்டால் சந்தேக நபரை விடுவிப்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதாக தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பாக மலர்வளையம் வைத்து, பயத்தை ஏற்படுத்தி அவமானப்படுத்தியதாக முன்னாள் அமைச்சரின் மகள் ஹிருணிகா ரம்புக்வெல்ல செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விடயங்களை கருத்திற்கொண்ட நீதவான், காணொளி காட்சிகளை பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்ததுடன், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களையும் மேலதிக விசாரணை அறிக்கைகளையும் பெப்ரவரி 10 இல், நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

# கனடாவில் துப்பாக்கிச்சூடு இங்கையர் ஒருவர் உயிரிழப்பு



கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளங்குடும்பஸ்தர் ஒருவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த, பார்த்தீபன் (வயது44) என்பவரே உயிரிழந்துள்ளார். இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்ராறியோவில் உள்ள அவரது வீட்டுக்கு முன்னால் இடம்பெற்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியண்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/10/15 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/11/12 மற்றும் 2024/11/13 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியண்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

skills



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.10.20
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5631
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,852,060.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 1 8 6 6 3 6

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 206
F ஆங்கில எழுத்து
6 6 3 6 வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3873
சீட்டிழுப்பு திகதி 2024.10.20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,275,422.80
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 09 11 37 58
விசேட எழுத்து S
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 098100

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1979
2024.10.20
055155
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.450,224,762.00
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 08 38 39 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 VIP
திகதி 2024.10.20
சீட்டிழுப்பு இலக்கம் 457
ஆங்கில எழுத்து X
L7 எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 9 2 6 0 6 9
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 21,466,419.36

ராசி சுப பலன்
திகதி 2024.10.20
சீட்டிழுப்பு இலக்கம் 940
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,499,940.80
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 25 29 35 43
தனயோக இலக்கம் 048818
நாளுக்கான விதி எண் 19

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1661
2024.10.20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,716,008.48
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 05 26 30 79
விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 031432



## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ

### மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ள கிளையில் அடகு வைக்கப்பட்டு, குறிப்பிட்ட ஒவ்வொரு கிளைக்கும் எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்பாக மீட்கப்படாத நகைகள் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதன் பின்னர் அடைப்புக் குறியினுள் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ஏலத்தலம், கல்கிசை கிளை, இல. 605, காலி வீதி, கல்கிசை.

| 30.09.2023க்கு முன் அடகுவைத்த நகைகள் | ஏலவிற்பனைத் திகதி |
| --- | --- |
| நுரைச்சோலை, தங்கொடுவ, ஹெந்தல்ல, ஐ-எல, கட்டுநாயக்க, வென்னப்புவ, நீர்கொழும்பு, உடப்பு, கம்பஹா, சீதுவை, கந்தானை, மினுவங்கொட, சிலாபம், வத்தளை, மாதம்பை, மரந்தகஹாமுல்ல, பமுனுகம, திவுலப்பிடிய, மாரவில, கொச்சிகடை, வெயங்கொட, ஏகல, புத்தளம், மீரிகம, ஆனமடு, ராகமை, பேலியகொட, கனேமுல்ல | 20.11.2024 |
| திருகோணமலை, தாண்டவன்வெளி, உஹன, பொத்துவில், உப்புவெளி, சம்மந்துறை, மட்டக்களப்பு, முத்தூர், வாழைச்சேனை, மருதமுனை, காத்தான்குடி, அம்பாறை, சேருநுவர, நிந்தாவூர், கல்முனை, கலவாஞ்சிகுடி, அக்கறைபத்து, முல்லிபத்தானை, திருகோணமலை மெட்ரோ, திருக்கோவில், காரைதீவு | 21.11.2024 |
| கிரேன்ட்பாஸ், ஜம்பெட்டா வீதி, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், செட்டியார் வீதி, பம்பலப்பிடிய, பாமன்கடை, அளுத்கடை, ஹல்வ்ஸ்டோப், மருதானை, புறகோட்டை, வெள்ளவத்தை | 22.11.2024 |
| கிளிநொச்சி வடக்கு, சுன்னாகம், முல்லைத்தீவு, குருமன்காடு, கைத்தடி, திருநெல்வேலி, மானிப்பாய், கிளிநொச்சி தெற்கு, சாவகச்சேரி, மன்னார், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, முள்ளியவளை, நானாட்டான், வவுனியா, யாழ்ப்பாணம், சங்கானை, யாழ்ப்பாணம் மெட்ரோ | 25.11.2024 |
| தெல்கொட, வெலிவேரிய, பூகொடை, களனி, ஹங்வெல்ல, பத்தரமுல்ல, கொலன்னாவை, மாலபே, நாவல, கடுவெல, நிட்டம்புவ, கிரிபத்கொட, பியகம, கிரிந்திவெல, விஜேராம, தலவத்துகொட, யக்கலை, ராஜகிரிய, நாரன்பிடிய, கடவத்தை, பொரளை, பஞ்சிகாவத்தை, தெமட்டகொடை, மாளிகாவத்தை | 26.11 .2024 |
| தலவாக்கலை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, கெலிஓய, அக்குரனை, பொகவந்தலாவை, புஸ்ஸலாவை, கலஹா, கடுகஸ்தொட, நாவலப்பிடிய, குண்டசாலை, மாவனெல்ல, கம்பளை, கினிகத்தேனை, ரிகிலகஸ்கடை, குருந்துவத்தை, மஹியங்கனை, ராகலை, பிலிமதலாவை, திகன, ஹற்றன், பேராதெனிய, மஸ்கெலியா | 27.11 .2024 |
| குருணாகலை, கெகிராவை, குளியாப்பிடிய, றம்புக்கனை, கலேவெல, அரலகங்வில, கேகாலை, தம்புளை, நிக்கவரெடிய, கந்தளை, கல்கமுவ, தெஹிஹத்தகண்டிய, அலவ்வ | 28.11 .2024 |
| பதவி பரகரமபுர, பொலன்னறுவை, அநுராதபுரம், குருணாகலை மெட்ரோ, வாரியபொல, மெதிரிகிரிய, மதவச்சி, தம்புத்தேகம, அநுராதபுரம் மெட்ரோ, நொச்சியாகமை, ஹெட்டிபொல | 29.11.2024 |
| மிரிஹான, கொட்டாவை, பொரலஸ்கமுவ, மஹரகம, அத்துருகிரிய, கல்கிஸ்ஸை, மொரட்டுவை, களுத்தரை, பாதுக்கை, ரத்மலானை, பாணந்துரை, மதுகம, பண்டாரகமை, வாதுவை, அளுத்கம, தெஹிவளை, பிலியந்தலை, ஹோமாகமை, மொரட்டுமுல்ல | 02.12 .2024 |
| அம்பலந்தொட, வலஸ்முல்ல, அக்குரஸ்ஸ, கராபிடிய, திக்வெல்ல, யக்கலமுல்ல, எல்பிடிய, ஹக்மன, அம்பலன்கொட, படபொல, பிடிகல, அங்குனுகொலபெலஸ்ஸ, திஸ்ஸமஹாராமை, ஊருபொக்க, தங்காலை, தெனியாய, தெவிநுவர, கதிர்காமம், ஹபராதுவ, மித்தெனிய, மாத்தறை, காலி, அம்பந்தோட்டை, வெலிகம, ஹிக்கடுவை | 03.12 .2024 |
| பண்டாரவளை, அப்புத்தளை, எம்பிலிபிடிய, இங்கிரிய, வெலிமடை, கொடகவெல, பசறை, பிபிலை, கலவான, சூரியவெவ | 04.12 .2024 |
| புத்தளை, பெல்மடுல்ல, ஹொரணை, இரத்தினபுரி, பலங்கொட, வெல்லவாய, மொனராகலை | 05.12 .2024 |
| பதுளை, அவிசாவளை, கஹவத்தை, சியம்பலான்டுவ | 06.12 .2024 |

மேலதிக அறிவித்தல் எதுவும் இன்றி மேலே குறிப்பிடப்பட்ட ஏல விற்பனைகளை ரத்துச் செய்யவோ பின்போடவோ, ஒன்றிணைத்து நடாத்தவோ அல்லது குறிப்பிட்ட ஏல விற்பனை ஸ்தானங்களை மாற்றவோ வங்கிக்கு உரிமையுண்டு என இத்தால் அறியத்தரப்படுகிறது.

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

தலைமை முகாமையாளர் (அடகுச் சேவை)
ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி.
அடகுச் சேவை பிரிவு - 3 கட்டம்
479, டீ.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. : 011-2660371/2660377

பிச் ரேட்டிங் AA-(lka) ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும். Hatton National Bank PLC - PQ 82

# கிழக்கின் குரல்



## பாராளுமன்றத் தேர்தல் பணிகள்; பிற்கொடுப்பனவு அஞ்சல் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

பாராளுமன்றத் தேர்தலுக்கு பிற்கொடுப்பனவு அஞ்சல் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பிரதி தபால் மா அதிபர் ராஜித கே.ரணசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிரூபம், சகல மாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர்களுக்கும் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்களுக்கும் அஞ்சல் அதிபர்கள் மற்றம் உப அஞ்சல் அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், மாவட்ட பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களால், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், பொதிகள் மற்றும் ஆவணங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.



அதன்படி, தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அரச உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் தேர்தல் ஆவணங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு, முதல் அஞ்சலிலேயே அவற்றை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், தேர்தல் பணிக்காக வேறு அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிடமிருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் கடித ஆவணங்களுக்காகவும் இந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் வரை இந்த அஞ்சல் வசதி அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆவணங்கள் அடங்கிய பொதிகளை பொறுப்பேற்கும் போது, பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் எடுப்பது மிகவும் அவசியமென மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காணமல்போன நபர் எட்டு நாட்களுக்கு பின் சடலமாக மீட்பு

கிண்ணியா மத்திய நிருபர்

கடந்த எட்டு நாட்களாக காணாமல் போயிருந்த நபரொருவர் நேற்று (21) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கந்தளாய் கித்துள்ஊற்று பகுதியைச் சேர்ந்த, 58 வயதான H.H தயாசிரி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எட்டு நாட்களுக்கு முன்னர், விறகுக்காக காட்டுக்குச் சென்று வருவதாக கூறிவிட்டுச் சென்ற இந்த நபர், நேற்றுக்காலை கந்தளாய் பிரதேசத்திலுள்ள, கேனமுள்ள காட்டுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரை காணவில்லையென, உறவினர்களால் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில்,



அவரை தேடும் விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிபடையினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே, 8 நாட்களுக்குப் பின்னர், இன்று காலை பொலிஸ் விசேட அதிரடிபடையினரால் இவரது சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எரியுண்ட நிலையில் பெண்ணின் சடலம்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாவடி பகுதியில், எரியுண்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம் (20) மாலை மீட்கப்பட்டுள்ளது. கூழாவடி பிரதான வீதியில் வீடு ஒன்றில் 57 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உடல் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.இப் பெண் வீட்டில் தனிமையில் இருந்தபோது, இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை மூதூர் கிழக்கில் குகதாசனின் பிரசாரம் ஆரம்பம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும், திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சண்முகம் குகதாசனின் தேர்தல் பிரசாரப்பணிகள் நேற்று முன்தினம் (20) மூதூர் கிழக்கில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்படி, நேற்றும் (21) இந்த தேர்தல் பிரசார பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவது துண்டுப் பிரசுரம் மூதூர் கிழக்கு சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ.அரசரெத்தினத்திடம் கையளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தன்னார்வ செயற்பாட்டாளர்களால், பாட்டாளிபுரம், வீரமாநகர், சீனன்வெளி, உப்புறல், இளங்கத்தை, இத்திக்குளம், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், மலைமுந்தல் உள்ளிட்ட பல பகுதிகளில் குகதாசனால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிக்க 14,003 பேர் விண்ணப்பம்

### அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி

மட்டக்களப்பு குறூப் நிருபர்

பாராளுமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புகள் இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு 14,003 பேர் தகுதிபெற்றுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட அரசாங்க அதிபருமான ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

அத்துடன், தபால் மூலம் வாக்களிப்புக்காக மாவட்டத்தில் 190 அரச நிலையங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இம் மாதம் 30ஆம் திகதி மாவட்ட செயலகம், தேர்தல் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்கள், தமது தபால் மூல வாக்களிப்பை செலுத்தவுள்ளனர்.

ஏனைய அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், நவம்பர் மாதம் முதலாம் திகதி தபால்மூலம் வாக்களிப்பார்கள் என மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான ஜே.ஜே.முரளிதரன் குறிப்பிட்டார். இம்மாவட்டத்தில், மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய தேர்தல் தொகுதிகளிலிருந்து 449,682 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாலமுனையில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார அலுவலகம் திறந்துவைப்பு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஆரையம்பதி பாலமுனை பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார அலுவலகமொன்று (18) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தை, பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிடும் அஷ்ஷெய்க் பிர்தௌஸ் நழீமி திறந்து வைத்தார். தேசிய மக்கள் சக்தியின் பாலமுனை செயற்பாட்டாளர் றம்சீன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் காத்தான்குடி மற்றும் பாலமுனை மத்திய குழு உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் சக்தி ஐ.ம.ச விடமே உள்ளது

### திகாமடுல்ல தேர்தல் வேட்பாளர் அமான் அஸீஸ்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர், பாலமுனை விசேட நிருபர்)

பாராளுமன்றத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்கி அமோக வெற்றி பெற்று பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி.ஏ.அஸீஸின் புதல்வரும், ஐக்கிய மக்கள் சக்கியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் முதலாம் இலக்க வேட்பாளருமான அமான் அஸீஸ் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் பல்வேறு பிரச்சி



னைகளும் தேவைகளும் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய சக்கி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு உள்ளது. மாற்றுக் கட்சியினர் பகற்கனவு காண்பது போன்று அக்கட்சியினரால் ஆட்சி அமைக்க முடியாது.

பொத்துவில் பிரதேச மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகள் ஒன்றும் இதுவரையில் எந்தவொரு அரசியல்வாதியினாலும் தீர்த்து வைக்கப்படவில்லை.

சில அரசியல்வாதிகள் இப்பகுதி மக்களை பொய் வார்த்தைகள் கூறி ஏமாற்றியதையும், வாக்குறுதிகள் வழங்கி நிறைவேற்றாமல் போவதையும் இம்மக்கள் நன்கு அறிவர். அவர்களின் சுய நலத்துக்காகவும், சுக போகங்களை அனுபவிப்பதற்காகவும் மக்களை பகடைக் காய்களாக பயன்படுத்திய வரலாறுகளையும் மக்கள் கண்ணூடாக கண்டு கொண்டுள்ளனர்.

எனவே, பாராளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களித்து, பொத்துவில் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து தேவைகளையும், அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து இன மக்களின் தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பினை எமக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

## தமிழர்களின் வாக்குகளை பிரிப்பதற்காக சுயேச்சைகள் களமிறக்கப்பட்டுள்ளன

### ஜ.த.தே.கூட்டணியின் வேட்பாளர் கருணாகரம் தெரிவிப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

தமிழர்களின் வாக்குகளை பிரித்து மாற்றினத்தவருக்கு ஆசனங்களைப் பெற வேண்டும் என்பதற்காக சுயேட்சை குழுக்கள் திட்டமிட்டு களமிறக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் (20) மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, 'தமிழர்களின் ஒற்றுமை நிலைத்திருக்க சங்கு முழங்கட்டும்' எனும் தலைப்பின் கீழ், பாராளுமன்ற தேர்தலில், சங்கு சின்னத்தில், போட்டியிடும் வேட்பாளர்கள் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.



இதில் கலந்துகொண்டு உரையாற்றிய கோவிந்தன் கருணாகரம், பாராளுமன்றத் தேர்தலானது வட, கிழக்குக்கு ஒரு முக்கியமான தேர்தலாகும். மட்டக்களப்பு மாவட்டத்திலே பல சுயேச்சை குழுக்கள் இம்முறை களமிறக்கப்பட்டுள்ளன.

அவர்கள் பல ஆயிரக் கணக்கான நிதியை செலவிட்டு அரசியல் செய்கின்றனர். இது யாருக்காக?

இதன் பின்னணிகளை நோக்கும் போது, தமிழினத்துக்கு துரோகம் இழைப்பதற்காகவே சுயேச்சை குழுக்கள் இம்முறை போட்டியிடுகின்றன.

எனவே, மாவட்டத்திலுள்ள மக்கள் அனைவரும் இம்முறை தேர்தலில் இணைந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்ட கச்சேரியில் தேர்தல் முறைப்பாட்டு மையம்

### அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம

காரைதீவு குறூப் நிருபர் சகா

பாராளுமன்ற தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை சுயாதீனமாக தெரிவிக்க, அம்பாறை கச்சேரியில் தேர்தல் முறைப்பாட்டு மையம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பில், பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் 26 ஆயிரமாக இருந்த தபால் மூல வாக்குகள், இம்முறை முப்பதாயிரமாக அதிகரித்துள்ளது. அத்துடன், அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்லூரியில், ஜனாதிபதி தேர்தலின்போது 56 ஆக இருந்த வாக்கெண்ணும் நிலையங்கள், பாராளுமன்ற தேர்தலில் 68 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகளினதும் 43 சுயேச்சை குழுக்களினதும் நியமன பத்திரங்கள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 555,432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர், இது வரையான காலப்பகுதியில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 07 ஆசன தெரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக்குழுக்கள் ஐம்பதினதும் நியமனப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதில், பல்வேறு குறைபாடுகளை கருத்திற்கொண்டு, ஒரு அரசியல் கட்சியையும் 07 சுயேச்சைக்குழுக்களையும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய நிராகரித்துள்ளோம்.

இதன்படி, தற்போது அங்கீகரிக்கப்பட்ட 21அரசியல் கட்சிகளினதும் 43 சுயேச்சைக்குழுக்களினதும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.மொத்தமாக 64 அரசியல் கட்சி உட்பட சுயேச்சைக்குழுக்கள் திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக போட்டியிடுகின்றன.

2024 ஆண்டு பொதுத்தேர்தல் அறிவித்ததன் பின்னர், அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றதும் அமைதியானதுமான தேர்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பெரியளவிலான வன்முறைகள் எவையும் இடம்பெறவில்லை. எனினும் சிறு சம்பவங்கள் தேர்தல் கண்காணிப்பு ஊடாக கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. வன்முறையற்ற நீதியான தேர்தல் ஒன்றினை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் தெரிவத்தாட்சி அலுவலருமான நானும் பொது மக்களின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மருதமுனை நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு



(கல்முனை விசேட நிருபர்)

2024 ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தை சிறப்பிக்கும் வகையில், மருதமுனை மருத்தூர்க் கனி ஞாபகார்த்த பொது நூலகத்துக்கு ஓய்வுபெற்ற அதிபர் ஏ.ஆர். அப்துல் ரசூல் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இப் புத்தகங்களை அவர் நூலகர் ஹரீஸா சமீமிடம் நேற்று (21) கையளித்துள்ளார். இந்நிகழ்வில், நூலக உதவியாளர்கள் மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, நூலக வளர்ச்சிக்கு இவ்வாறான சமூக ஆர்வலர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஒத்துழைப்பு வழங்கி வருவதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாக நூலகர் ஹரீஸா குறிப்பிட்டார்.

ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை மற்றும் சாய்ந்தமருது பொது நூலகங்களினால் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானைகள் அட்டகாசம்

தோப்பூர் குறூப் நிருபர்



தோப்பூர் அல்தாஜ் மகா வித்தியாலயத்துக்குள் நேற்று (21) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் பயன்தரும் தென்னை மரங்களை நாசமாக்கியுள்ளது.

இப் பாடசாலையில், பயன்தந்து கொண்டிருந்த மூன்று தென்னை மரங்களே இவ்வாறு காட்டு யானைகளால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக, இப்பிரதேச குடியிருப்புக் காணிக்குள் உட்புகும் காட்டு யானைகள் பயிர்ச்செய்கைகளை சேதப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கட்டாக்காலி மாடுகளால் அவதி



மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபை பிரிவுக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களை முகங்கொடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

கடைத்தெருக்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பிரதான வீதிகளில், கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கட்டாக்காலி மாடுகள் பகல் நேரங்களிலும் வேலைப் பளு மிக்க நேரங்களிலும் வீதிகளின் நடுவே கூட்டங் கூட்டமாக திரிவதனால், வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் விபத்துகளும் இடம்பெறுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே உரிய அதிகாரி கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நகர்வலம்



தரம் ஐந்து வினாத்தாள் கசிவு

## CID அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழு மதிப்பாய்வு




தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் சர்ச்சைக்குரிய முதலாவது வினாத்தாள் தொடர்பான பரிந்துரைகளை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பரீட்சை வினாக்களில் மூன்று கேள்விகள் கசிந்தமை தொடர்பிலான, குற்றப்புலனாய்வு திணைக்கள அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளதாக ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை ஆய்வு செய்த பின்னர், ஆணைக்குழு தனது பரிந்துரைகளை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் .

இதேவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளதுடன், விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளிலிருந்து 3 கேள்விகள் கசிந்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து மூன்று கேள்விகள் கசிந்துள்ளதை உறுதி செய்த பரீட்சை ஆணைக்குழு, இந்தக் கேள்விகளுக்கு மதிப்பெண்களை வழங்கவும் முடிவு செய்தது.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் உட்பட 54 நபர்கள் , பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதைத் தடுக்க இடைக்காலத் தடை விதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்தனர்.

முதல் வினாத்தாளை ரத்து செய்து, மீண்டும் பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்றும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக யானை வேலிகளை அமைத்தோருக்கு கடும் நடவடிக்கை

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நாடளாவிய ரீதியில் வனப்பாதுகாப்பு எல்லைகளை வரையறுத்து யானை வேலிகளை அமைக்கும் நடவடிக்கைகள் 80 சதவீதமளவில் நிறைவடைந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளதோடு சட்டவிரோதமான முறையில் யானை வேலிகளை அமைத்துள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுவரை 5500 கிலோமீட்டர் உள்ளடங்கும் வகையில் யானை வேலி அமைக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் 1500 கிலோமீட்டருக்கான யானை வேலியை அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. யானை வேலி அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன் அவற்றை பராமரிப்பதற்காக சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோரை ஈடுபடுத்தவுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் யானை வேலிகளை அமைத்துள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## நந்தவனம் சந்திரசேகரனுக்கு மலேசியாவில் விருது



மலேசியாவில் கடந்த 67 ஆண்டுகளாக இயங்கி வரும் முதல் தனியார் நூலகமான முத்தமிழ்ப் படிப்பகம் (20) அன்று நடத்திய கலைமகள் விழாவில் தமிழ் நாட்டிலிருந்து 27 ஆண்டுகளாக தமிழ்ப்பணி ஆற்றி வரும் இனிய நந்தவனம் மாத இதழின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனுக்கு முத்தமிழ்ப்படிப்பக தலைவர் பெ. இராமன் தலைமையில் மலேசியா தேசிய ஒருமைப்பாட்டு

துணையமைச்சர் சரஸ்வதி கந்தசாமியினால் மகாகவி பாரதி விருது வழங்கி சிறப்பித்தார். நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து குழுவாக மலேசியா வருகை தந்த தமிழ் அறிஞர் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## யஹ்யா சின்வாரின் படுகொலை; மு.கா தலைவர் கண்டனம்



ஹமாஸ் இயக்கத்திற்கு தலைமைத்துவம் வழங்கி அண்மையில் சியோனிஸவாதிகளினால் கொலையுண்ட தியாகி இஸ்மாயில் ஹனியாவைத் தொடர்ந்து ,அந்த விடுதலை இயக்கத்திற்கு தலைமை வகித்து,வழிநடாத்தி வந்த யஹ்யா சின்வார் அவ்வாறே கொல்லப்பட்ட சம்பவத்தில் அமைதிக்கான நம்பிக்கையை சிதைத்து சின்னாபின்னமாக்கிய இஸ்ரேலை வன்மையாக கண்டிப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இஸ்ரேலியப் படையினரால் ஹமாஸின் தலைவரான யஹ்யா சின்வார் கொல்லப்பட்டது காஸாவில் வியாபித்துவரும் ஈவிரக்கமற்ற கொலைத் தாண்டவத்தின் ஆழ்ந்த கவலையளிக்கும் மற்றொரு தருணமாகும். இப்போது ஈரானுக்கும் லெபனானுக்கும் அடுத்தடுத்து இஸ்ரேலால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் போர் நடவடிக்கையின் தீய விளைவாக இது இரத்தம் தோய்ந்த வரலாற்றில் இடம்பெறுகின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் கடந்த பல்லாண்டுகளாக அளப்பரிய பங்களிப்பை தொடர்ச்சியாக செய்துவரும் ஹமாஸ் , ஹிஸ்புல்லாஹ் போன்றவற்றையும் அவற்றின் ஈடிணையற்ற தலைவர்களையும் நாங்கள் மதிக்கின்றோம். பாலஸ்தீனத்தைப் பாதுகாப்பதில் யஹ்யா சின்வாரின் தளராத முயற்சி பொங்கி எழும் போரில் தனது தலைவிதியை நன்குணர்ந்த வீரச் செம்மலின் தீரச் செயலாகும்.

"சின்வார் கொல்லப்பட்ட போதிலும், காஸாவில் போர் முடிவடையவில்லை" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு மார் தட்டுவது அருவருப்பானது. பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் போன்ற உலக நாட்டுத்தலைவர்கள், "சின்வார் கொல்லப்பட்டது போருக்கு ஒரு திருப்புமுனையைக் கொண்டு வந்து அதனை முடிவுக்கு இட்டுச் செல்லும் "என்று கூறுவதும் கூட கேலிக் கூத்தாகும் என அவர் தெரிவித்தார்.

## நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கஹட்டகஸ்திகிலிய இஹல கங்ஹிடிகம வாவியில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் இருவரும் மேலும் இருவருடன் மது அருந்திவிட்டு நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பொல்கஹவெல மற்றும் பூஜாபிட்டிய பகுதியைச் சேர்ந்த 24 மற்றும் 34 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளம் சர்வமதக் குழுவின் முழுநாள் செயலமர்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**



தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் புத்தளம் மாவட்ட சர்வமதக் குழுவின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு புத்தளம் பாலாவி “வொடப்ட்” மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இச்செயலமர்வில் வளவாளராக தேசிய சமாதானப் பேரவையின் திட்ட உத்தியோகத்தர் திருமதி ஜஷானியா ஜயரத்ன கலந்து கொண்டார்.

புத்தளம் மாவட்டத்தில் சக வாழ்வை நிலை நாட்டுவதில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்காண்பதற்கான விசேட நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச் செயலமர்வின் மூலம் மாவட்டத்தின் அமைதிக்கு இடையூறாக உள்ள 15 விடயங்கள் கண்டறியப்பட்டன. இவற்றில் மொழிப் பிரச்சினை மற்றும் தவறான கருத்துக்கள் என்பன முதன்மைப் பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டமை விசேட அம்சமாகும். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாதர் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட புத்தியாகம ரத்ன தேரர், சுந்தாராம குருக்கள், அருட்தந்தை யொஹான் ஜெயராஜ், அஷ்ஷெய்க் அப்துல் முஜீப் ஆகிய சர்வ மதத் தலைவர்களும் கலந்து கொண்ட இச் செயலமர்வை மாவட்ட சர்வமத அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. முஸ்னியா நெறிப்படுத்தினார்.

## கொழும்பு வாழ் தோட்டப்புற மக்களின் வாழ்வு மேம்படுத்தப்படும்

தேசியப்பட்டியல் அங்கத்தவர் பாபுசர்மா



கொழும்பு வாழ் மக்கள் குறிப்பாக தோட்டப்புறங்களில் வாழும் மக்கள் மிகுந்த அடிப்படை வசதிகள் இல்லாமல் சிரமப்படுவது பற்றியதொரு கலந்துரையாடல் ஒன்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை வேட்பாளர் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான எஸ் ராஜேந்திரன் மற்றும் தேசியப்பட்டியல் அங்கத்தவர் பாபுசர்மாவுடன் கொழும்பு முகத்துவாரத்தில் இடம் பெற்றது.

இதன்போது தோட்டப்புற வாழ் மக்களின் சந்திப்பில் அவர்களது குடியிருப்புகளில் குடிநீர் வசதி இல்லாத கஷ்டங்களையும் மற்றும் போதியளவு மலசலகூடம் இல்லாமை மற்றும் போதியளவு சுகாதாரமின்மையும் பற்றிய விடயங்களை எடுத்து கூறியதுடன் அவர்களது சுய வாழ்வாதாரத்திற்கான சுயதொழில் ஊக்குவிப்பு திட்டங்களையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என தங்களது கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர்.

இந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை வேட்பாளரான எஸ். ராஜேந்திரன் , தான் மேல் மாகாண சபை உறுப்பினராக இருந்தபோது பல தோட்டப்புறவாழ் மக்களுக்கு அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்தவனாக பல்வேறு உதவி திட்டங்களையும் சேவையையும் செய்திருந்தேன். இ ப்போது பொது தேர்தலில் இறங்கியுள்ள நிலையில் நிச்சயமாக இந்த மக்களுடைய பிரச்சினைகளை படிப்படியாக தீர்ப்பதற்காக எங்கள் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடி உரிய இடங்களுக்கு கொண்டு சென்று தோட்டப்புற மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைககளை மேற்கொள்வோம் என தெரிவித்திருந்தார்.

மேலும் இலங்கை அரசாங்கத்தினால் வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது தோட்டப்புற மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என தேசியப்பட்டியல் உறுப்பினர் பாபுசர்மா உறுதி மொழி வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நௌஸர் பௌஸியுடன் விசேட கலந்துரையாடல்





புதிய ஜனநாயக முன்னணி (சிலிண்டர் சின்னம்) சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌஸர் பௌஸியை ஆதரித்து மத்திய கொழும்பு தொகுதியின் சுதுவெல்ல, மாளிகாகந்த, பஞ்சிகாவத்தை மேற்கு, மாளிகாவத்தை, கிழக்கு மாளிகாவத்தை, அளுத்கடை கிழக்கு மற்றும் ஜிந்துப்பிட்டி ஆகிய பிரிவுகளின் அமைப்பாளர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, அமைப்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் நௌஸர் பௌஸியின் வெற்றிக்கு தாம் உழைப்பதாக இதன்போது உறுதி தெரிவித்தனர்.

இச்சந்திப்பில், பிரதேச அமைப்புகளைச் சேர்ந்த மாதர்கள், முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பாலும் கலந்துகொண்டார்.



உடப்பு மீன்பிடிக் கிராமத்தில் தற்போது பல வகையான மீன்கள் கரைவலை மூலம் பிடிக்கப்பட்டு வருகின்றன. அவை கூடுதலாக கொழும்பு மீன் சந்தைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. சில மீன்களில் சாலை மீன், நெத்தலி மீன் ,காரல்மீன், குத்தாமீன் போன்றவை கருவாட்டுக்காக பதப்படுத்தப்பட்டு வருகின்றன. பின்னர் அவை வியாபாரிகளுக்கு விற்கப்படுகிறது. **படம் உடப்பு குறூப் நிருபர்**

## மாவனல்லை பதுரியாவில் சின்னம் சூட்டும் விழா






மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் 2024ஆம் வருடத்துக்கான மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் ஏ. எல். ஏ.ரஹ்மான் தலைமையில் இல்மா வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக மாவனல்லை வலய கல்விப் பணிப்பாளர் எம் .ஏ .பிரியங்கா பிரியதர்சினி, அதிதியாக பிரதேச கல்விப் பணிப்பாளர் நிரோஷா பெர்னாண்டோ , விஷேட அதிதியாக இப்பாடசாலையின் பழைய மாணவரும் தொழிலதிபருமான சஹீமுள்ளா இக்பால் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட களுத்துறை மக்களுக்கு உதவிகள்

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**



களுத்துறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிலவிவரும் மோசமான காலநிலை காரணமாக தாழ்நில பிரதேசங்களிலுள்ள குடிசை வீடுகளில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பிரதேசங்களில் இருண்ட காலநிலையுடன் அடிக்கடி மழை பெய்து வருவதால் தாழ்நில பகுதிகளில் தேங்கும் மழை நீரினால் வறிய மக்களின் குடிசை வீடுகள் பாதிப்படைந்து மக்களும் வாழ்வாதாரத்துக்காக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த தல்பிடிய பஸ்மன் ஹந்திய மற்றும் ஹேனமுல்ல பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களில் உதவிகள் கிடைக்கப் பெறாத மக்களுக்கு களுத்துறை மாவட்ட சமூக ஊடகவியலாளர் சமன் காரியவசத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

பொறியியலாளர் நலந்த அல்விஸ் உள்ளிட்ட சமூக ஆர்வலர்களின் அனுசரணையில் இந்த வாழ்வாதார உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஊடகவியலாளர் சமன் காரியவசம் தெரிவித்தார்.

# மலையக கலை கலாசார இரத்தின தீப சங்க ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு

## மகாத்மா காந்தி, சோமசுந்தரப் புலவர், சிவாஜி கணேசன் மற்றும் கலைஞர் றொபட் டேனியல் நினைவு கூரப்பட்டனர்

மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி, சோமசுந்தரப் புலவர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மற்றும் சமீபத்தில் மரணம் எய்திய முத்திரை சேகரிப்பாளர் கலைஞர் றொபட் டேனியல் ஆகியோர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு அமரர் செல்லத்துரைப் பிள்ளை ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் தேசமானிய எஸ். பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.





இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொல்கொல்ல மகாவலி தேசிய கல்வியல் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் சிவசாமி மனோகரன் மற்றும் கௌரவ விருந்தினராக கம்பளை இந்துக் கல்லூரி அதிபர் செல்லையா ரகு மற்றும் கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக தேசமானிய சந்தரவதனா ரட்ண ராஜ குருக்கள், தேசமானிய வேலுப்பிள்ளை சிதம்பரநாதன், கலாபூசணம் இஸ்மாலிகா, தேசமானிய எஸ். ஏ. ஹனீப் , ஸ்ரீலங்கா பென் கிளப்பின் செயலாளர் ஷாமென் நிஸாம்டீன், சிவநேஸ்வர தமிழ் வித்தியால அதிபர் எம். நவநீதன், ஆசிரியை சந்திரலேக்கா ராஜேந்திரா, எம். சக்திவேல், லயன் கேசவ மூர்த்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.



இந்நிகழ்வில் வரவேற்புரையினை கலாபூசணம் இரா. அ. இராமன், சிறப்புரையினை பேராசிரியர் துரை மனோகரன், நன்றியுரை கலைஞர் ராஜா ஜென்கின்ஸ் நிகழ்த்தினர்.

அதேவேளை, இந்நிகழ்வில் விசேட அம்சமாக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குனர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு மகாத்மா காந்தி, சோமசுந்தரப் புலவர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மற்றும் சமீபத்தில் மரணம் எய்திய முத்திரை சேகரிப்பாளர் கலைஞர் றொபட் டேனியல் ஆகியோர்களின் கருத்துரைகள் இடம்பெற்றன.

**'தங்கத் தாத்தா' என்று போற்றப்பட்ட இலங்கை தமிழறிஞரான சோமசுந்தர புலவர்**

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலி என்ற ஊரில் (1878) பிறந்தார். தந்தையிடமும் நவாலியூர் அருணாசல உபாத்தியாயரிடமும் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் கற்றார். உறவினர் ராமலிங்க உபாத்தியாயரிடமும் மானிப்பாய் மாரிமுத்துவிடமும் ஆங்கிலம் கற்றார். சிறு வயதிலேயே பேச்சாற்றலும் விவாதத் திறமையும் ஒருங்கே பெற்றிருந்தார். ஏராளமான பாடல்கள் இயற்றினார். அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி முருகன் திருஊஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை உள்ளிட்ட நூல்கள் இவர் இளம் வயதில் இயற்றியவை.

ஆசிரியப் பணியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வட்டுக்கோட்டையில் இருந்த சின்னத்தம்பி ஆசிரியருடன் இணைந்து ஆங்கிலப் பாடசாலை தொடங்கினார். அங்கு 40 ஆண்டுகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழ், ஆங்கிலம், இதிகாசம் கற்பித்தார். 'சைவவாலிபர் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கி சமயப் பாடங்களைக் கற்பித்தார்.

ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகும்கூட, மாணவர்களுக்கு சைவ சித்தாந்தம் உள்ளிட்ட இலக்கிய வகுப்புகளை நடத்தி தமிழ்த் தொண்டுஆற்றினார்.

கலித்தொகை, திருக்குறள், திருக்கோவையார், சிவஞானபோதம், கந்தபுராண செய்யுள்களைத் தெளிவாகவும் அழகாகவும், நகைச்சுவையுடனும் நடத்தி மாணவர்களுக்கு விளங்க வைப்பார்.

பதிகம், ஊஞ்சல், கலம்பகம், நான்மணிமாலை, அட்டகம், அந்தாதி, சிலேடை வெண்பா என பல வடிவில் பாடல்கள் பாடியுள்ளார். 400க்கும் மேற்பட்ட அடிகள் கொண்ட கலிவெண்பா வகையில் அமைந்த தால விலாசம் மிகவும் பிரசித்தம்.

யாப்பிலக்கணங்கள் கற்பதற்கு முன்பாகவே பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். இதனால், இவரை 'வரகவி' என்று அழைத்தனர். 'உயிரிளங்குமரன்' என்ற நாடகமும் எழுதியுள்ளார். இது அட்டகிரிகந்த சுவாமி கோயிலில் அரங்கேற்றப்பட்டது. 'சைவபாலிய சம்போதினி' என்ற சைவசித்தாந்த மாத இதழை 1910ல் தொடங்கி, 5 ஆண்டுகள் நடத்தினார். 1927ல் ஈழத்துதென்னிந்தியத் தமிழ் அறிஞர்கள் இவருக்குப் பொற்கிழியும் புலவர் பட்டமும் வழங்கினர்.

ஆங்கில ஆட்சியை எதிர்த்து தேசிய விழிப்புணர்வைத் தூண்டும் பாடல்களை எழுதினார். கந்தவனக் கடவை நான்மணிமாலை, தந்தையார் பதிற்றுப்பத்து, நல்லையந்தாதி, நல்லை முருகன் திருப்புகழ், கதிரைமலை வேலவர் பதிகம் ஆகியவை குறிப்பிடத்தக்க படைப்புகள்.



குழந்தைகளுக்கான ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி, புளுக்கொடியல், பவளக்கொடி, இலவு காத்த கிளி உள்ளிட்ட ஏராளமான பாடல்களை இயற்றி சிறுவர் இலக்கிய முன்னோடி என்ற பெருமை பெற்றார். தாடி அறுந்த வேடன், எலியும் சேவலும் உள்ளிட்ட இவரது கதைப் பாடல்கள் சிறுவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பவை.

தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றினார். ஏறக்குறைய 15 ஆயிரம் பாடல்களை எழுதியுள்ளார். சிறுவர்களுக்காக இவர் பாடிய பாடல்கள் 'சிறுவர் செந்தமிழ்' என்றபெயரில் 1955ல் நூலாக வெளிவந்தது. சிலேடை வெண்பா இயற்றுவது இவரது தனிச்சிறப்பு. தமிழுக்காக 60 ஆண்டுகளுக்கு மேலாக தொண்டாற்றிய 'தங்கத் தாத்தா' நவாலியூர் சோமசுந்தர புலவர் 75வது வயதில் (1953) மறைந்தார்.

**மகாத்மா காந்தி**

சுதந்திர இந்தியாவின் தேசப்பிதா என்று அழைக்கப்படுபவர் மகாத்மா காந்தி. இவரது முழுப்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. 2 அக்டோபர் 1869 அன்று இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார். இவரின் தாய்மொழி குஜராத்தி மொழி. மகாத்மா காந்தியின் தந்தையின் பெயர் கரம்சந்த் உத்தம் சந்த் காந்தி, தாயார் பெயர் புத்லிபாய் ஆகும். காந்தி தனது 13ஆம் வயதில் தம் வயதேயான கஸ்தூரி பாயை மணந்தார். காந்தி சிறு வயதில் பார்த்த அரிச்சந்திரா நாடகம் இவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. காந்தி தனது 16ஆம் வயதில் தந்தையை இழந்தார். காந்திக்கு 4 ஆண் குழந்தைகள் பிறந்தது. தனது குடும்ப வாழ்க்கையோடு நிறுத்திவிடாமல் சமூகத்தின் மீது பற்றுஉடையவராக வாழ்ந்தார்.

காந்திபடிப்பில் சுமாரான மாணவனாக இருந்தாலும் நேர்மையான மாணவனாக இருந்தார். காந்தி தனது 18 ஆம் வயதில் பாரிஸ்டர் எனப்படும் வழக்கறிஞர் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். வழக்கறிஞர் படிப்பை முடித்து சிறிதுகாலம் வழக்கறிஞராக மும்பையில் பணியாற்றினார்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நீதிமன்றத்திற்கு வருபவர்களின் விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் பணியை செய்தார். 1893 ல் ஒரு இந்திய நிறுவனத்தின் உதவியால் தென்னாப்பிரிக்காவில் பணிபுரிய பயணத்தை தொடங்கினார். தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர் ஆட்சியில் நிறவெறியும், இனப்பாகுபாடும் அதிகமாக இருந்தது. இது காந்தியின் மனதை காயப்படுத்தியது. அங்கு காந்திக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அவரை மிக பெரியஅரசியல் சக்தியாக மாற்றியது.

காந்தி தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா ரயிலில் ஏறிய காந்தி, அவர் வெள்ளையர் இல்லை என்பதற்காக தூக்கி வீசப்பட்டார். அந்த ரயில் நிலையத்தில் காந்தியின் சிலை வைக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களும் அங்கே குடிபெயர்ந்த இந்திய மக்களும் படும்பிரச்சினைகளை உணர்ந்தார். அதனால் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் வாக்குரிமையை நிறுத்தும் தீர்மானத்தை எதிர்த்தார்.

1894இல் தென்னாப்பிரிக்காவில் நாட்டில் இந்திய காங்கிரஸ் எனும் கட்சியை ஆரம்பித்தார். அதில் அவரே தலைமை வகித்தார்.

அறவழிபோராட்டத்தின் மூலம் தென்னாபிரிக்காவில் வாழும் இந்தியர்களின் சமூகநிலையை உயர்த்தி அவரது முயற்சியில் வெற்றியை கண்டார்.

1924 ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக பொறுப்பேற்றார். காங்கிரஸில் பல மாற்றங்களை காந்தி ஏற்படுத்தினார். இவர் முதலில் விவசாயிகளுக்கான சம்பாரண் போராட்டத்தை தொடங்கினார். 1930 ல் 240 மைல் நடைபயணம் இந்திய வரலாற்றில் உப்பு சத்தியாகிரகம் என்று சொல்லப்படுகிறது.1942 இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் காந்திபெரும் பங்களிப்பு ஆற்றினார். 1947ல் இந்தியா சுதந்திரம் அடைய முக்கியமான ஒருவராக காந்தி இருந்தார்.





**காந்திக்கு கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் மகாத்மா என்ற பட்டத்தை வழங்கினார்**

குஜராத் மொழியில் எழுதி தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட சுயசரிதை சத்திய சோதனை நூல் ஆகும். காந்தியை பெருமைப்படுத்தும் வகையில் இந்தியாவில் பல இடங்களில் சிலைகளும் அருங்காட்சியகங்களும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்திய கல்வித் திட்டத்தில் காந்தியின் வரலாறு ஒருபாடமாகவும் கற்பிக்கபடுகிறது.

**நடிகர் திலகம் சிவாஜி கணேசன்**

தென்னிந்தியாவின் ஒரு பெரிய நடிகராகவும் அரசியல் வாதியாகவும் இருந்தார்.

தனது குழந்தைப் பருவத்திலிருந்தே நடிப்பதில் பேரார்வம் கொண்ட அவர், அதில் தன்னை நடிப்புத் துறையில் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். பின்னர், அவர் தெலுங்கில் ஒன்பது திரைப்படங்கள், கன்னடத்தில் ஒன்று, மலையாளத்தில் இரண்டு, ஹிந்தியில் இரண்டு திரைப்படங்கள் என முன்னூறுக்கும் மேற்பட்ட இந்திய திரைப்படங்களில் நடித்துள்ளார்.

**சிவாஜி கணேசன் அவர்களின் பிறப்பு:** 1 அக்டோபர் 1927.

**பிறந்த இடம்:** விழுப்புரம், தமிழ்நாடு, இந்தியா.

**இறப்பு:** 21 ஜூலை 2001

**தொழில்:** நடிகர், அரசியல்வாதி நாட்டுரிமை இந்தியா.

சிவாஜி கணேசன் , சின்னையா மன்றாயருக்கும், ராஜாமணி அம்மாளுக்கும் மகனாக விழுப்புரத்தில் 1 அக்டோபர் 1927 ஆம் ஆண்டு பிறந்தார். அவரது இயற்பெயர் விழுப்புரம் சின்னையாப்பிள்ளை கணேசன்.

சிவாஜி கணேசன் அவர்கள்,தனது இளம்வயதிலேயே நாடகங்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டதாலும் அதில் பங்கேற்பதில் ஆர்வம் இருந்ததாலும் தனது கனவினை நிறைவேற்ற ஒன்பது வயதிலேயே வீட்டை விட்டு ஓடி வந்தார். பின்னர், அவரது சொந்த அம்மாவே நாடகக் குழுவில் இடம் பெற உதவி செய்தார். சிவாஜி கணேசன் ,கமலா என்பவரை மணமுடித்தார். அவர்களுக்கு ராம்குமார், பிரபு என்ற மகன்களும் சாந்தி, தேன்மொழி என்ற மகள்களும் உள்ளனர்.

தமிழ்த் திரையுலகில், 'பராசக்தி'என்றதிரைப்படம் மூலமாக அறிமுகமான சிவாஜி கணேசன் அவர்கள், முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்துள்ளார். அவர், இரண்டு ஹிந்தி திரைப்படங்கள்,ஒன்பது தெலுங்குத் திரைப்படங்கள், மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார். அவருக்குத் தெளிவான,உணர்ச்சிப் பூர்வமான தமிழ் உச்சரிப்பும், நல்லகுரல்வளமும், சிறந்த நடிப்புத் திறனும் இருந்ததால், 'நடிகர் திலகம்' என்றும், 'நடிப்புச் சக்கரவர்த்தி' என்றும் மக்களாலும், திரையுலகத்தினராலும் அழைக்கப்பட்டார்.

அக்காலத்தில்,தேசத் தலைவர்களின் பத்திரங்களை ஏற்றுத் திறம்பட நடித்த முக்கிய நடிகர்களுள் ஒருவர் சிவாஜி கணேசன். 'இராஜராஜ சோழன்' மற்றும் 'கப்பலோட்டிய தமிழன்' ஆகிய திரைப்படங்களே இதற்கு சான்றாகும். 'மனோகரா', 'வீரபாண்டிய கட்டபொம்மன்' போன்ற திரைப்படங்கள், இவரின் வீரவசனத்திற்காகப் பெயர்ப் பெற்றவை.

'பாசமலர்', 'வசந்தமாளிகை' போன்ற திரைப்படங்களில் இவரது உணர்ச்சிப்பூர்வமான நடிப்பைக் காணலாம். 'கந்தன் கருணை','திருவிளையாடல்', 'சரஸ்வதி சபதம்' போன்றபக்தித் திரைப்படங்களும் பெரிதும் பேசப்பட்டவை.அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த சிவாஜி கணேசன், 1955 வரை திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1961ல்,காங்கிரஸ் கட்சியில் இணைந்து செயல்பட்டார். 1982ல் நாடாளுமன்றத்தின் மேலவை உறுப்பினரானார். பின்னர்,கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, 1987ல் கட்சியைவிட்டுவிலகி, 'தமிழக முன்னேற்ற முன்னணி' என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். பெரும்நடிகராக இருந்தாலும், அவருக்கு அரசியலில் எம்.ஜி.ராமச்சந்திரன் போலசெல்வாக்குக் கிடைக்கவில்லை. ஆகவே,தனது இறுதிக்காலத்தில் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

1960 – ஆப்பிரிக்க ஆசியத் திரைப்படவிழாவில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது. 1966 – பத்ம ஸ்ரீவிருது, 1984 – பத்ம பூஷன் விருது, 1995 – செவாலியேவிருது, 1997 – தாதாசாகேப் பால்கே விருது, 1962 – சிறப்பு விருந்தினராக அமெரிக்க நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, நயாகரா மாநகரின் 'ஒருநாள் நகரத் தந்தை' என கௌரவிக்கப்பட்டார்.தென்னிந்தியதிரைப்படத் துறையில், சிறந்த நடிகராக விளங்கிய சிவாஜி கணேசன், சுவாசப் பிரச்சினைக் காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஜூலை 21, 2001 ஆம் ஆண்டு தனது 74வது வயதில் மரணமடைந்தார்.







**றொபர்ட் டேனியல்**

இவர் எம்மோடு சேர்ந்து வாழ்ந்தவர். முத்திரை சேகரிப்பாளர். அதன் பல சாதனைகள் நிகழ்த்தியவர். அவர் பிரிவு எமது கலை இலக்கியக் குடும்பத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி

# வடக்கில் எதிர்வரும் 26ஆம் திகதி வரை கனமழை பெய்யும் சாத்தியம்

**யாழ்.விசேட நிருபர்**

வங்காள விரிகுடாவில் ஏற்படவுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக, எதிர்வரும் 26ஆம் திகதி வரை வடக்கில் கனமழைக்குச் சாத்தியம் உள்ளதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும் வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு அண்மித்ததாகக் காற்றழுத்தத் தாழ்வுநிலையொன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இது எதிர்வரும் 22ஆம் திகதி ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறி மேற்குத் திசையில் நகர்ந்து 25ஆம் திகதி புயலாக மாறி இந்தியாவின் புவனேஸ்வருக்கு அருகில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் புயலால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் தற்போதைய நிலையில் நேரடியாக எந்தப் பாதிப்புமில்லை.

இதன் காரணமாக எதிர்வரும் 26ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது.

அதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதத்திலும் மூன்று தாழமுக்க நிகழ்வுகள் தோன்றும் வாய்ப்புள்ளன.

நவம்பர் மாதத்தின் 18 நாட்கள் மழை நாட்களாக அமையக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் எதிர்வரும் நவம்பரில் அதிக மழை கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈ.பி.டி.பியின் அரசியல் அதிகாரத்தை வடக்கிலும் மக்கள் வலுப்படுத்துவர்

**கோப்பாய் குறுப் நிருபர்**



வடக்கிலும் ஈ.பி.டி.பியின் அரசியல் அதிகாரத்தை மக்கள் வலுப்படுத்துவார்கள் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.வேலணை மற்றும், வடக்கு நாரந்தனை, நாரந்தனை மத்தி ஆகிய பிரதேச மக்களுடனான சந்திப்புக்கள் அண்மையில் நடைபெற்றன.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

குறிப்பாக எமது வழிமுறையே சாத்தியமானது என்பதும் இன்று நிரூபணமாகியுள்ளது.

இதை ஏற்றுள்ள மக்கள் இம்முறை மத்தியில் உருவாகியுள்ள மாற்றம் போன்று வடக்கிலும் ஈ.பி.டி.பியிடம் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

மேலும் ஈ.பி.டிபியின் தேசிய நல்லிணக்கம் மத்திய அரசுடன் மட்டுமல்லாது ஏனைய இன மக்கள் மத்தியிலும் எப்போதும் வலுவாகவே இருக்கின்றது.

அதனால்தான் மக்கள் வழங்குகின்ற ஆணையின் பலத்தின் அடிப்படையிலேயே மத்தியில் உள்ள அரசாங்கத்தோடு ஆட்சியில் பங்கெடுப்பதற்கும், பேரம் பேசலுக்கும் நாடாளுமன்ற தேர்தல்களில் அதிகரித்த ஆசனங்களை வழங்குங்கள் எனவும் கோரிவருகின்றேன்.

அதனடிப்படையில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில், யதார்த்த அரசியலையும், ஈ.பி.டி.பி. கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருக்கின்ற நியாயத்தினையும் புரிந்துகொண்டு உங்களது ஆதரவு பலத்தையும் வழங்கவேண்டுமென்று கேட்கிறேன். அந்தவகையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் இலக்கை அடைவதற்கு வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தல் எமது மக்கள் எமது கட்சிக்கு அணிதிரண்டு வாக்களித்து எம்மை வெற்றி பெறச் செய்வார்கள் என நம்புகின்றேன் என்றார்.

## பற்றைக்காடொன்றிலிருந்து சொகுசு கார் மீட்பு



**பருத்தித்துறை விசேட, யாழ் . விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் பற்றைக்காடொன்றிலிருந்து சொகுசு கார் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பற்றைக்காடு ஒன்றினுள் சொகுசு கார் ஒன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் காரை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் காரின் இலக்க தகட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, அது போலியானது என தெரியவந்துள்ளது.

# வடக்கின் உதயம்

## மன்னார் பிரதான பாலத்தடியில் கடற்கரை பூங்கா அமைக்க நடவடிக்கை



**மன்னார் குறுப் நிருபர்**

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் கடற்கரை பூங்காவொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய நேற்று அடிக்கல் நாட்டு விழா மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நீண்டகாலமாக இராணுவ சோதனை அமைக்கப்பட்டிருந்த பகுதியிலேயே கடற்கரை பூங்காவை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீண்ட நாட்களாக பிரதான பாலத்துக்கு அருகில் இராணுவ சோதனை சாவடி மற்றும் இராணுவ முகாம் வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த இராணுவ சோதனை சாவடி அகற்றப்பட்டு காணி மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் மன்னார் மக்கள் ஓய்வு நேரங்களை கழிக்கும் விதமாக கடற்கரை பூங்கா அமைப்பதற்கான நிதி முதற்கட்டமாக நகர சபையால் ஒதுக்கப்பட்ட நிலையில் அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் மாவட்ட இராணுவ கட்டளையிடும் தளபதியின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. முதலில் கடற்கரை பூங்காவிற்கான திரைச்சீலை நீக்கப்பட்டதுடன் நிர்மாண பணி தொடர்பான விபரங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அதனைத்தொடர்ந்து மரக்கன்று நடுகையும் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்,பிரதேச செயலாளர்கள், நகரசபை செயலாளர்கள், நகரசபை ஊழியர்கள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டனர்.

## யாழ். வைத்தியசாலை படுகொலைகள்; 68 பேரை நினைவுகூர்ந்து அஞ்சலி நிகழ்வு

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ். போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட 68 பேரின் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம், 22ஆம், திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய அமைதிப்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். இத்தாக்குதல் சம்பவத்தில் வைத்தியசாலையில் கடமையிலிருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் மற்றும், சிகிச்சை பெற்று வந்த 47 நோயாளர்கள் என 68 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

## சிறுவர் – மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் திறப்பு

**யாழ். விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் சிறுவர் மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் உத்தியோகபூர்வமாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்து கொண்டு சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகத்தை திறந்து வைத்தார்.

# மாற்றம் எனக் கூறி தமிழ் தேசியத்தை அடமானம் வைக்க முடியாது

**யாழ்.விசேட நிருபர்**

மாற்றம் என கூறி தமிழ் தேசியத்தை அடமானம் வைக்க முடியாது என தமிழ் மக்கள் கூட்டணி வேட்பாளர் தவச்செல்வம் சிற்பரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் தெற்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் தாக்கம் தமிழர் மத்தியிலும் உண்டு. அதாவது ஊழலற்ற சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற அவா இருக்கின்றது. அதற்காக தமிழ் தேசியத்தை அடமானம் வைக்க முடியாது. மக்களுக்கு மாற்றம் தேவை, பழையவர்கள் வேண்டாம் என நினைக்கிறார்கள்.




அந்தவகையில் இந்த தேர்தலில் போட்டியிடும் இளைய ஆளுமை மிக்க அணியை மக்கள் ஆதரிக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும் மாற்றமானது "எமக்காக நாம்" என எம்மின இளையோரை நோக்கியதாகவே இருக்கும் என நம்புகிறேன்

அதேவேளை எமது கட்சி தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் ஐயா மதுபான சாலைக்கான அனுமதி பத்திரமொன்றுக்கு சிபாரிசு கடிதம் வழங்கியதை சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் விமர்சிக்கின்றனர். என அவர் மேலும் தெரிவித்தார்.



தமிழ் ஊடகவியலாளர்களுக்காக, இவ்வருட பொதுத்தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் குமார் அண்ணா அண்மையில் மன்னார் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றார்.

# பாராளுமன்ற தேர்தலில் ஜ.த.தே. கூட்டணிக்கு இரட்டிப்பு ஆதரவை மக்கள் வழங்குவார்கள்

**மன்னார் குறுப் நிருபர்**

பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு இரட்டிப்பான ஆதரவை தமிழ் மக்கள் வழங்குவார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை (21) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் இம்முறை போட்டியிடுகின்ற மிக பலமான கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறது.

அதே வேளை இத்தேர்தலானது அதிகூடிய பாராளுமன்ற வேட்பாளர்களை கொண்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லுகின்ற ஒரு கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் தேசிய இன பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்கிற விடயத்தில் பலமான கூட்டணியாக இது காணப்படுகின்றது.



தமிழ் மக்களுக்கு கடந்த 75 வருடங்களாக ஒரு தேசிய இனப்பிரச்சினை காணப்படுகின்றது. தேசிய இனப்பிரச்சினைக்காக பல வருடங்களாக அஹிம்சை ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் தமிழ் மக்கள் போராடியுள்ளனர். இதனால் ஆயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை முன் நிறுத்தி நாங்கள் வடக்கு கிழக்கில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாங்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இருந்தோம். மிகக் குறுகிய காலத்தில் 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் எமக்கு வாக்களித்து உள்ளனர்.

அது இந்த பாராளுமன்ற தேர்தலில் இரட்டிப்பான ஆதரவை தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முச்சக்கரவண்டி மோதி வயோதிபப் பெண் உயிரிழப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம், கட்டப்பிராய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ். நகர் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணின் மீது மோதியதில் இவ்விபத்து சம்பவித்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்த பெண், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். முச்சக்கரவண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நத்தார் கரோல் பாடல் போட்டி விண்ணப்பம் கோரல்

**தலைமன்னார் விசேட நிருபர்**

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்துள்ள நாடளாவிய ரீதியிலான 2024 ஆம் ஆண்டுக்கான நத்தார் கரோல் பாடல் போட்டிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் இந்த ஆண்டு (2024) கிறிஸ்தவ பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் கிறிஸ்தவர்களுக்காக கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்தப் போட்டியானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஊடகத்தில் நடைபெறவுள்ளதுடன் குழுப்பாடலாக வழங்கப்பட வேண்டும் என்றும் அதிகபட்ச நேரம் 03 நிமிடங்கள். பங்கேற்பவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 15 மற்றும் குறைந்தபட்சம் 10 ஆக இருக்க வேண்டும். ஒரு விண்ணப்பத்தார் ஒரு மொழியில் மட்டுமே விண்ணபிக்க முடியும். கரோல் பாடலானது புதிய படைப்பாக இருக்க வேண்டும். பாடல் வரிகள், மெல்லிசை மற்றும் இசை வேறு எந்த போட்டியிலும் வெற்றி பெற்றிருக்கக் கூடாது. இத்துடன் திணைக்களம் வழங்கும் பொதுப் பாடலையும் பாட வேண்டும்.

# வாக்குச் சீட்டு விநியோகிக்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு



**பருத்தித்துறை விசேட, யாழ் . விசேட நிருபர்கள்**

பாராளுமன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டு விநியோகிக்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர்,

கடந்த ஜனாதிபதி தேர்தல் நீதியாகவும் சுமூகமாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமது நன்றிகளை தெரிவித்து, தபால் மூலமான வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்களை பொதியிட்டு விநியோகிக்கும் கடமையானது ஒரு குழுக்கடமையாகும் என்பதால் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் வினைத்திறமையாக செயற்பட்டு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டார். பாராளுமன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜினால் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் கடமையில் ஈடுபடவுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## கசிப்புடன் ஒருவர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணத்தில் 10 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். சூரியபண்டாரவுக்கு கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த 42 வயதுடைய நபரே 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# இ.தொ.காங்கிரஸ் கல்விக்கே முன்னுரிமை வழங்கி வருகிறது

(தலவாக்கலை குறூப் நிருபர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருவதாக அதன் தவிசாளர் மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

நுவரெலியா வெஸ்டடோல் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. கல்வியே எமது சமூகத்தை முதன்மை படுத்தும். நமது வளர்ச்சி கல்வியிலேயே தங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் கடந்த ஒன்றரை வருடங்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நுவரெலியா மாவட்டத்திற்கு கொண்டு வந்தோம். அதில் கல்விக்கே முன்னுரிமை கொடுத்துள்ளோம். ஒரு சமூகம் தலைநிமிர்ந்து வாழ கல்வியே முதன்மை வகிக்கின்றது. அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் புதிய பாடசாலை கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ரூ.300 மில்லியனை பெற்றுக் கொடுத்துள்ளோம். பாடசாலைகளுக்கு கணினி,போட்டோ கொப்பி இயந்திரங்கள், மடிக் கணினி போன்றவற்றை பெற்றுக்கொடுத்துள்ளோம். மலையகத்திலே மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதல் இன்றுவரை இ.தொ.கா கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.



மலையகத்தில் கல்வி கற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் முகமாக 2530 உதவி ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 அடிப்படை சம்பளத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளோம். கடந்த பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஐந்து பேர் போட்டியிட்டோம். அதில் இரண்டு பேர் வெற்றிப் பெற்று பாராளுமன்றம் சென்றதாக அவர் தெரிவித்தார்.




# அரசியல் அனுபவம் வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளே பாராளுமன்றத்துக்கு தேவை

(மாவத்தகம நிருபர்)

இன்றைய காலக்கட்டத்தில் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்த அனுபவம் வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளையே மக்கள் விரும்புவதாக கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்.

கண்டியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மக்களின் உணர்வுகளை நன்கு மதிக்கக் கூடிய மக்கள் பிரதிநிதிகளையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும். ஏனென்றால் இன்றைய காலக்கட்டத்தில் அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே தேவைப்படுகின்றனர். இன்று பல கட்சிகள் பல புதிய முகங்களை அறிமுகப்படுத்தியிருந்தாலும் கூட அவர்கள் மக்களிடத்திலே பரீட்சயமான முகங்களாக நாங்கள் காணவில்லை. இன்று நாடு பல விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்ற தருணத்தில் நீண்டகாலம் அரசியல் அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே பாராளுமன்றத்திற்கு தேவை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம்.



எனவே கண்டி மாவட்ட மக்கள் இத்தேர்தலில் மிகவும் புத்திசாதுரியத்துடன் மிகவும் கரிசனையோடு சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

இந்த தேர்தலைப் பொறுத்தவரையில் எமது சமூகத்தைச் சார்ந்த இருவர் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலில் நானும் முன்னாள் அமைச்சர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஆகிய இருவரும் போட்டியிடுகின்றோம். எமது சமூகத்திலுள்ள மக்கள் இத்தேர்தலை மிகவும் அவதானத்துடன் கையாண்டு முஸ்லிம்களுடைய பிரதிநிதித்துவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

எனவே நீங்கள் உங்களுடைய வாக்குகளை எங்கள் இருவருக்கும் வழங்கி உங்கள் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## முதியவரை மோதிய மோட்டார் சைக்கிள்; இராணுவவீரர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் 70 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரை மோட்டார் சைக்கிளில் மோதி தப்பி சென்ற முன்னாள் இராணுவ வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர். இரத்தினபுரி எல்பிட்டிய என்ற இடத்தில் கடந்த 4 ஆம் திகதி முதியவரை மோதி தள்ளிவிட்டு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார். இதனையடுத்து பலரின் உதவியுடன் காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர் இதன் பின்னர் பொலிஸார் சீ.சீ.டிவி கெமரா மூலம் நடத்திய விசாரணையின் பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு பெல்மதுளை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு



(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

தலவாக்கலை லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி எல்லைக்குட்பட்ட பாலர் பாடசாலை மற்றும் தோட்ட சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு அகரபத்தனை, ஹோல்புரூக் நகரில் அண்மையில் நடைபெற்றது.

சிறுவயது முதலே மாணவர்களை கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சியளிக்கும் நோக்கில் இச்செயலமர்வு நடைபெற்றது.

வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்தல், பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற மக்காத கழிவுகளை முகாமைத்துவம் செய்தல், கழிவு நீரினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்ற விடயங்கள் தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளால் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தோட்ட சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தெளிவுப்படுத்தப்பட்டது.

நுவரெலியா மாநகர சபையின் பிரதம பொது சுகாதார அதிகாரி எம். கே.ஹேரத், நுவரெலியா பிராந்திய சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் ஏ.எம்.கே. மதுசங்க உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.



வத்துகாமம் லிட்டில் ஏஞ்சல்ஸ் பாலர் பள்ளியின் 25ஆவது வருட கண்காட்சி அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. பாலர் பள்ளியின் அதிபர் திருமதி.அன்னே ஜெயமானே (Anne Jayamanne) சிறுமி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு: எஸ்.ராமதாஸ்)

# 'ஸ்கை' ஊடக அமைப்பின் உலகத் தமிழ் விருது விழா



கட்டார் நாட்டை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'ஸ்கை' ஊடக அமைப்பின் உலகத் தமிழ் விருது விழா நேற்று மாலை தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் எம் . வாஸீத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை பல்துறை ஆளுமைகள் பலரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட்ட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள் கல்முனை விஷேட நிருபர் சம்சுதீன்)

# பஹ்ஜத்துல் இப்ராஹீமிய்யா அரபுக்கல்லூரியில் புனரமைக்கப்பட்ட புதிய நூலகம் திறந்து வைப்பு

**பேருவளை விசேட நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற பஹ்ஜத்துல் இப்ராஹீமிய்யா அரபுக் கலாசாலையின் நூலகம் நவீன வசதிகளுடன் பல இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

1892 ஆம் ஆண்டு மாக்கான் மாக்கார் குடும்ப முன்னோடிகளான ஓ.எல்.எம் மாக்கான் மாக்கார் ஆமினா உம்மா தம்பதியினரால் இக்கலாநிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் முஹம்மத் அஹ்ஸன் மரிக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, "ஸேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் நினைவு நூலகம்" என்ற பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வாயில் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.





காலி கோட்டையில் அமையப்பெற்றுள்ள ஜும்ஆ பள்ளியில் அஸர் தொழுகையை நிறைவு செய்த கையோடு அதிதிகள் அடுத்த தெருவிலுள்ள பஹ்ஜத்துல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரிக்கு ஊர்வலமாக பைத் ஓதலுடன் அழைத்து வரப்பட்டனர்.

நூலகம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வைபவ நிகழ்வுகள் ஆரம்பமாகின. கல்லூரி அதிபர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி முஹம்மத் ரஸூக் (பஹ்ஜி)யின் வழிகாட்டலின் கீழ் கல்லூரி நிர்வாக தலைவர் நுஸ்கி முஹம்மத் வரவேற்புரை நிகழ்த்தினார். அத்துடன் கல்லூரி மாணவர்களின் சுற்றுலா பயணத்திற்காக சுமார் ஒரு இலட்சம் ரூபா நிதியையும் கையளித்தார்.

கல்லூரியின் பணிப்பாளர் கொழும்பு உம்மு ஸாவியாவின் பேஷ் இமாமான மௌலவி எம்.எப்.எம் பாஸில் (பஹ்ஜி) உரை நிகழ்த்தினார். மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் முஹம்மத் அஹ்ஸன் மரிக்கார் தனது உரையில்,

பஹ்ஜத்துல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரி இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று பொக்கிஷமாகும். இங்கு வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான நூல்களைப் பார்வையிட்டேன். அனைத்தும் விலை மதிக்கவொண்ணாத அறிவுக்களஞ்சியமாகவுள்ளன. சுமார் நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த அரபு கிதாபுகள் காணப்படுகின்றன. கையெழுத்துப் பிரதிகள் கூட வரலாற்றுப் பழைமையை கட்டியம் கூறி நிற்கின்றன. இந்த கலாபீடத்தை அமைத்து தொடர்ந்து நிர்வகித்து வரும் ஸேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் குடும்பத்தினரின் உயரிய சேவைகளை பாராட்ட வேண்டும் என்றார்.

# சங்கு சின்னம் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சின்னமல்ல ; அது சுயேச்சை சின்னமாகும்

சங்கு சின்னம் என்பது தனக்கு எழுதித் கொடுக்கப்பட்ட சின்னமல்ல எனவும் அது சுயேச்சையின் சின்னம் என தெரிவித்த, பாக்கியச்செல்வம் அரியநேத்திரன், இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின் படி சுயேச்சை குழுவில் யார் வேண்டுமானலும் போட்டியிடலாம் எனவும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக, மட்டு. மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஞானமுத்து சிறிநேசனுக்காக, பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட களுவாஞ்சிகுடி நகர் பகுதியில் நேற்று முன்தினம் (20) மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்த தெரிவித்த அரியநேத்திரன்,

ஒரு சிரேஷ்ட உறுப்பினர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுபோது, அபிவிருத்திகள் மாத்திரமன்றி தமிழ் தேசிய அரசியலை மேற்கொண்டு செல்வதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும்.

ஒரு கல்விமானாகவும், இலங்கை தமிழ் கட்சியிலே மூத்த உறுப்பினராகவும், கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் ஞானமுத்து சிறிநேசன் செயல்பட்டு வருகின்றார். ஆகையினாலேயே நாம் அவருக்காக பரப்புரை செய்து வருகின்றோம்.



சங்கு சின்னம் என்பது எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல. அது ஒரு சுயேச்சையின் சின்னமாகும். இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின் படி, சுயேச்சை குழுவில் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம். அதில் நூற்றுக்கு மேற்பட்ட சின்னங்கள் வெளியிடுவார்கள். அதில் வருகின்ற ஒரு சின்னத்தை குறிப்பிட்ட குழுவுக்கு வழங்குவார்கள் இது வழக்கம்.

அதனடிப்படையில், நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது நான் விரும்பியே சங்கு சின்னத்தை பெற்றுக் கொண்டேன். அப்போது முப்பது நாட்களுக்கு மாத்திரம்தான் சங்கு சின்னத்தை பாவிப்பதற்கு தேர்தல் ஆணையம் எனக்கு அனுமதி வழங்கியிருந்தது. அந்த சின்னத்தை பயன்படுத்தி பரிபூரணமாக தமிழ் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் 83 சிவில் அமைப்புகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து என்னை களமிறக்கியதனால் நான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டேன். நான் அந்த ஏழு கட்சிகளிலோ, 83 சிவில் அமைப்புகளிலோ அங்கத்துவம் வகிக்கவில்லை.

இலங்கைத் தமிழரசு கட்சியின் ஆயுட்கால உறுப்பினராகவே இன்றும் இருந்து கொண்டிருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# களுத்துறை நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த உல்லாச பயணியின் பணம் திருட்டு

**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறையில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர ஹோட்டல் அறை ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணியான பெண்ணொருவரின் சுமார் இரண்டர இலட்சம் ரூபாய் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. களுத்துறை தெற்கு பகுதியில் அமைந்துள்ள மேற்படி சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த ருமேனிய நாட்டு பிரஜையான கிருஷ்டினா மொனாயன் என்பவர், தனது அறையில் உள்ள பெட்டகத்தில் (safe locker) சுமார் இரண்டரை ரூபாய் பணத்தை பாதுகாப்பாக வைத்துவிட்டு கண்டி பகுதியில் சுற்றுலா பயணத்தை மேற்கொண்ட பின்னர் மீண்டும் தான் தங்கியிருந்த களுத்துறை ஹோட்டல் அறைக்கு வந்து பார்த்த போது பாதுகாப்பாக பெட்டகத்தில் வைத்து விட்டு சென்ற பணம் இல்லாததை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

# நகை, ஏரிஎம் அட்டை திருட்டு; தம்பதியினர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில், வீடொன்று உடைக்கப்பட்டு நகை மற்றும் ஏரிஎம் அட்டை திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக, அவ் வீட்டின் மேல் குடியிருந்த கணவன், மனைவி இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி திருச்செந்தூரில் அமைந்துள்ள, வீடொன்றிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட நகை, மட்டக்களப்பு நகரிலுள்ள நகைக் கடையொன்றில் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவருகின்றது.

இச் சம்பவத்தில், திருடப்பட்ட வீட்டின் மேல் மாடியில் வாடகை அடிப்படையில் குடியிருந்த, அக்கரைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனும் அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். திருடப்பட்ட வீட்டின், அருகிலுள்ள பூட்சிட்டி ஒன்றில் சந்தேகநபர்கள் பொருட் கொள்வனவில் ஈடுபட்டபோது, வீட்டின் உரிமையாளருக்கு வந்த குறுஞ்செய்தியின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து, தங்க நகை மற்றும் 1 இலட்சத்து ஐயாயிரம் ரூபாய் பணம் ஏரிஎம் அட்டை என்பன மீட்கப்பட்டுள்ளன.

சம்பம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள காத்தான்குடி பொலிஸார், சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

# 220 பேர் போட்டி

**வெலிகம தினகரன் நிருபர்**

பாராளுமன்ற தேர்தலில் மாத்தறை மாவட்டத்திலிருந்து 07 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக 15 அரசியல் கட்சிகள் மற்றும் 7 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 220 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மாத்தறை மாவட்டத்தில் 7 தேர்தல் தொகுதிகள் உள்ளன. இம் மாவட்டத்தில் 6 இலட்சத்து 86 ஆயிரத்து 175 பேர் (6,86175) வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.


## மக்கள் வங்கி

**பிராந்திய தலைமைக் காரியாலயம் நுவரெலியா.**
**மீட்கப்படாத தங்க நகைகளின் ஏலவிற்பனை**

மக்கள் வங்கி நுவரெலியா பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.08.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 29.11.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்காட்டப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பளை நிகழும் தினங்கள் -30.11.2024**

| ஏலமிடும் இடம் | இராகலை | தலவாக்கலை |
|---|---|---|
| கிளை | இராகலை, நுவரெலியா, உடபுஸ்சல்லாவ ஹங்குராங்கெத்த, நில்தண்டாகின்ன ரிகில்லகஸ்கட | தலவாக்கலை, பூண்டுலோயா, மஸ்கெலியா, ஹட்டன், கினிகத்தேன பொகவந்தலாவ |
| சேவை நிலையங்கள் | இராகலை, கந்தபொல, நானுஓயா, பதியபெலல்ல, ஹேவாஹெட்ட, அதிகாரிகம, வலப்பனை | அக்கரபத்தன, ஹப்புகஸ்தலாவ, தவலந்தென்ன, அப்கொட், டிக்கோயா கொட்டகலை, வட்டவலை |

இந்த ஏலங்களை அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய. ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிகளுக்கு உரிமை உண்டு

**பிராந்திய முகாமையாளர் பிராந்திய தலைமைக் காரியாலயம், நுவரெலியா.**

**052-2222555**

PEOPLE'S BANK
Pride of the Nation



கமத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சு
## தேசிய உணவு மேம்பாட்டு சபை
(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

NFPB National Food Promotion Board

**பாடசாலை மதிய உணவுத் திட்டத்திற்கு அரிசியை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு பொருத்தமான வழங்குனர்களை தேர்ந்தெடுப்பதற்கு மற்றும் ஆர்வத்தினை வெளிப்படுத்துவது தொடர்பான விலைமனுக்கோரல் (EOI)**

தேசிய உணவு மேம்பாட்டு சபை உலக உணவுத் திட்டத்தின் நிதிப் பங்களிப்போடு பாடசாலை மதிய உணவுத் திட்டத்திற்காக இரும்பு மற்றும் ஃபோலிக் அமிலத்தால் செறிவூட்டப்பட்ட அரிசியை தயாரித்து விநியோகிப்பதற்கு தகுதியான அரிசி ஆலை உரிமையாளர்கள் / மற்றும் அரிசி பதப்படுத்தும் நிலையங்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டினை கோருகின்றது.

இந்த வேலைத்திட்டமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சபையினால் இந்த அரிசியை கலப்பதற்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட அரிசியை (அரிசி கர்னல்கள்) வழங்கப்படுவதுடன், மேலும் தம்மால் வழங்கப்படும் உள்ளூர் நாட்டு அரிசி மற்றும் வெள்ளை பச்சை அரிசியுடன் கலந்து அந்தந்த மாவட்டங்களில் சபையினால் நியமிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு விநியோகித்தல் வேண்டும்.

அதன்படி, அந்த மாவட்டங்களில் அதிகாரமளிக்கப்பட்ட அரிசி பதப்படுத்தும் பிரிவுகளைத் தொடங்குவதற்காக ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க இதன் மூலம் தெரிவிக்குமாறு கோரப்படுகின்றார்கள். அரிசியை உற்பத்தி செய்வதற்கும் மற்றும் விநியோகிப்பதற்கும் திறன், ஆற்றல் மற்றும் நிதி பலம் கொண்ட அரிசி பதப்படுத்துபவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அரிசி விநியோகிக்கப்பட வேண்டும், மேலும் மாத இறுதியில் வழங்கப்படும் விலைப்பட்டியலுக்கு அமைய மூன்று வாரங்களுக்குள் பணம் செலுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அரிசி விநியோகத்திற்குத் தேவையான லொரிகள் மற்றும் பணியாளர்களை அவர்களினால் வழங்கப்படல் வேண்டும், மேலும் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கு ஏற்ப விநியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அபிலாஷைகளை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தை சபையின் தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவில் அல்லது சபையின் இணையதளமான www.nfpb.lk இருந்து பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு கடைசி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளும் நடைமுறையானது **2024.11.05 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு** முடிவடைகிறது, மேலும் ஆர்வத்தை வெளிப்படுத்தும் இறுதி நேரத்திற்கு முன், மேலும் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை இறுதி நேரத்திற்கு முன்பு பின்வரும் முகவரிக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்களாம். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில், **“பாடசாலை மாணவர்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குவதற்கான ஆர்வ வெளிப்பாடு”** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். இதற்கான பரிந்துரை வழிகாட்டியை எங்கள் இணையதளத்தில் பெறலாம்.தகுதியான ஆர்வவெளிப்பாட்டாளர்களை தேர்வு பணி நிபுணர் குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. விண்ணப்பங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

தலைவர்,
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்ட. தொலைபேசி : 011 2506895, பெக்ஸ் : 011 2506907
www.nfpb.lk



## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

## நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்க வரைவு திட்டம் 2025-2044 பொது ஆலோசனை கேட்டல்

**(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)**

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் (திருத்தப்பட்டது) இதன் மூலம் இலங்கை மின்சாரசபையால் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2023-2044 வரைவு தொடர்பான பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு (ஆணைக்குழு) தனது முடிவை அறிவிக்கிறது.

2025-2044 திட்டமிடல் காலத்திற்கு மின்சாரசபையால் நடத்தப்பட்ட சமீபத்திய மின்சார விரிவாக்க திட்டமிடல் ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் இந்தத் திட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம், நாட்டில் தற்போதுள்ள மின்னுற்பத்திமுறை, எதிர்கால மின்சாரதேவை மற்றும் எதிர்கால மின்னுற்பத்தி விருப்பங்கள் பற்றிய விரிவான பார்வையை வழங்குகிறது. இது தலைமுறை திட்டமிடல்முறை, கணினி தேவை முன்னறிவிப்பு மற்றும் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான முதலீடு மற்றும் செயல்படுத்தல் திட்டம் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகிறது.

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பங்குதாரர்களின் ஆலோசனையை ஆணைக்குழு நடத்த உத்தேசித்துள்ளது.

2025-2044 நீண்ட கால மின் உற்பத்தித் உற்பத்தி வரைவுத் திட்டத்தையும் அதுதொடர்பான ஆலோசனை பத்திரத்தையும் www.pucsl.gov.lk/notices இங்கே தறவிறக்கலாம்.

பொதுமக்கள் அனைவரும் நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2025-2044 வரைவு தொடர்பான பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டலுக்காக பின்வரும் விடயங்களில் ஏதேனும் இருந்தால் எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளைச் சமர்ப்பிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள், மேலும் அத்தகைய சமர்ப்பிப்புகளை ஆணைக்குழு பரிசீலிக்கலாம் அல்லது தேவைப்பட்டால் வாய்மொழி மூல கருத்து வழங்குமாறு குறித்த தரப்பினரைக் கோரலாம்.

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழ்ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் வாய்மொழி மூல சமர்ப்பிப்புகளுக்கான அமர்வு நடத்தப்படும். ஆர்வமுள்ள தரப்பினருக்கு (நேரம் வழங்கப்பட்டு) வாய்ப்பு வழங்கப்படும். மேற்கூறிய அமர்வில் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். எனவே, எழுத்துமூல சமர்ப்பிப்புடன் அமர்வில் பங்கேற்பதற்கான உங்கள் ஆர்வத்தை நீங்கள் குறிப்பிடலாம். திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பின்னர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகள் அனைத்தும் எதிர்வரும் **17 நவம்பர் 2024 ஆம் திகதிக்கு முன்** கீழேகுறிப்பிட்ட முறைமைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

“நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்க வரைவுத் திட்டம் 2025-2044 பற்றிய பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டல்”
இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு,
06வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல. 28, புனித மைக்கேல் வீதி, கொழும்பு 03.

தொலைநகல்: (011) 2392641
தொலைபேசி: (011) 2392607/8
மின்னஞ்சல் முகவரி: consultation@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk
முகநூல்: www.facebook.com/pucsl

மேலதிக தகவல்களுக்காக 0770126254 என்ற தொலைபேசி இலக்கத்தில் திரு.சமீர அதிகாரம் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

திகதி: 22.10.2024

## பிங்கிரிய பிரதேச சபை

### நிகழ்வு வரவு செலவுத் திட்ட அறிக்கை – 2025ம் வருடம்

பிங்கிரிய பிரதேச சபையின் 2025ம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு - செலவுத் திட்ட அறிக்கை 2024 ஒக்டோபர் 30 முதல் நவம்பர் 08 வரை (அரச விடுமுறை தினம், சனி,ஞாயிறு தினங்கள் தவிர்த்து) அலுவலக நேரங்களில் பிங்கிரிய பிரதேச சபை அலுவலகத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை வரவு - செலவுத் திட்ட பெறுகையை அமுல்படுத்தும் விதிகளின் 10:2 (ஆ) விதியின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.ஏ.நிஷான் லக்மால்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பிங்கிரிய**

**2024 ஒக்டோபர் 18ம் திகதி**
**பிங்கிரிய பிரதேச சபை.**
**போவத்த**






## மக்கள் வங்கி

### மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏலவிற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2023.08.31 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 2024.11.22 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பொது ஏலத்தில் விற்கப்படும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

| | |
|---|---|
| **ஏலவிற்பனை நிகழும் திகதி** | 2024.11.23 மற்றும் 2024.11.24 |
| **ஏலவிற்பனை நிகழும் இடம்** | மக்கள் வங்கி - இரத்தினபுரி நகர கிளை, முதலாம் மாடி (குடுகல்வத்தை) |
| **அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள்** | எம்பிலிப்பிட்டிய, பெல்மடுல்ல, உடவனவை, கொடகவெல, இறக்குவானை, கஹவத்தை, பலாங்கொடை. எஹலியகொட, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தோட்டை, குருவிட்ட, கிரியெல்ல, நிவித்திகல, கலவானை, பல்லேபெத்தை. |
| **அடகு வைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள்** | பதலங்கல, கொலன்ன, செவனகல, ஓபனாயக்க, பம்பஹின்ன, வெலிகேபொல, எஹலியகொடை, இரத்தினபுரி புதிய நகரம், வெவெல்வத்தை, வேலிஓய, அயகம, கரவிட்ட |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்து செயற்பட. அல்லது ஏலத்தை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமையுண்டு என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

**பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம், புதிய நகரம் . இரத்தினபுரி**
**தொலைபேசி இலக்கம்: 0452223084 / 0452230818**

PEOPLE'S BANK
Pride of the Nation

## சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை வெலிசறை

### பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2025

2025ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக இலங்கைப் பிரசைகளான வழங்குநர்கள்/பதிவு செய்யப் பெற்றுள்ள வணிகக் கம்பனிகள்/ கூட்டுறவுச் சங்கங்கள்/ கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. அனைத்து விண்ணப்பங்களும் 2024 நவம்பர் 22 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'பணிப்பாளர் சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை வெலிசறை' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2025ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| (அ) வழங்கல்கள் | | (ஆ) சேவைகள் | |
|---|---|---|---|
| 01. | அச்சு இயந்திரங்கள்/ ரோணியோ இயந்திரங்கள் உட்பட (கணனி காகிதாதிகள் உட்பட) அலுவலக காகிதாதிகள் | 23. | அலுவலக உபகரணங்களை சேர்விஸ் செய்தல்/புதுப்பித்தல் போட்டோ கொப்பி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், கணனி, தட்டச்சுக்கள், தொலைநகல் இயந்திரங்கள் போன்றவை |
| 02. | அச்சு இயந்திரங்கள்/ ரோணியோ இயந்திரத்திற்கு தேவையான ரிபன், டோனர், காட்ரிஜ் உட்பட | 24. | அலுவலக உபகரணங்கள் சேர்விஸ் செய்தல்/ பழுதுபார்த்தல் (போட்டோ கொப்பி மெசின், ரோணியோ மெசின், பெக்ஸ் மெசின், மல்ட்டி மீடியா இயந்திரம் |
| 03. | இரும்பு/ மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள | 25. | கணனி இயந்திரங்கள் சேர்விஸ் செய்தல் |
| 04. | கணனி இயந்திரங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ நிழற்பட பிரதியிடல் இயந்திரங்கள்/ரோணியோ இயந்திரங்கள்/ டுப்ளோ இயந்திரங்கள் மற்றும் கணனி அச்சு இயந்திரங்கள் | 26 | கெப் வண்டி/ நோயாளர் காவு வண்டி பழுதுபார்த்தல்/ வாகன வளிச்சீராக்கல் மற்றும் மின் அமைப்பு பழுதுபார்த்தல்/ பெயின்ட் செய்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 05. | கணனி மென்பொருட்கள்/ வன்பொருள் போன்ற துணைபாகங்கள் | 27. | சகல வகையான கதிரை/ உருக்கு/ மரம் தளபாடங்கள் பழுதுபார்த்தல் |
| 06. | மின் உபகரணங்கள் (வளிச்சீராக்கி இயந்திரம்/ குளிர்சாதனம்/ துணி சலவை இயந்திரம், மின்விசிறி போன்றன) | 28. | இரும்புக் கட்டில்கள்/பிணியாளர் காவி/ சக்கர நாற்காலிகள்/சேலைன் நிறுத்திகள் போன்ற மருத்துவ உபகரணங்களின் புதுப்பித்தல்கள் |
| 07. | வைத்தியசாலை துணிகள் (தைத்த ஆடை/ கட்டில் விரிப்புகள்/ கட்டமிடப்பட்ட துணி/ நுளம்பு வகை/ துவாய்/ திரைச்சீலை/ மெகிங் டொஷ் மற்றும் ரெக்சின்/ பஞ்சு தலையனை) | 29. | துணி சலவை இயந்திரம், மின்விசிறி, மின்கேத்தல், பொயிலர் தொலைக்காட்சி, தையல் மெசின் உட்பட ஏனைய மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 08 | ஹாட்வெயார் பொருட்கள் (இரும்பு/ ட்ரொலி சக்கரம்/ பொயிலர்/ மின்கம்பி (எலிமன்ட்) மின்விளக்கு/ மின்கம்பி/ பல்வேறு சுவிட்ச் வகைகள் மற்றும் கட்டிட உபகரணங்கள்) | 30. | குளிரூட்டிகள் மற்றும் வளிச்சீராக்கிகளின் சேவைகள் மற்றும் புதுப்பித்தல்கள் |
| 09. | குப்பைகளை அகற்றும் பொலித்தீன் பேக் | 31. | பிரேத அறையின் குளிரூட்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 10. | துப்புரவேற்பாட்டு பொருட்கள் (நறுமண சோப்/ சலவைத்துள்/ சலவை சோப்/ சுத்திகரிப்பு பொருட்கள் உட்பட ஏனைய சகல பாவணைப்பொருட்கள்) | 32. | வாயு அடுப்புக்களைப் புதுப்பித்தல் |
| 11. | மெத்தை/ தும்புத்தடி/ விளக்குமாறு/ பிரஷ் மற்றும் சகல வகையான தும்பு இறப்பர் கலப்பு உற்பத்திகள் | 33. | வாகன காப்புறுதி செய்தல் |
| 12. | பாதணிகள்/(Boots மற்றும் CANVASS)/செருப்புகள்/ரெக்சின் மற்றும் இறப்பர் உற்பத்திகள் | 34. | வணிகப் பெறுமதியற்ற மரங்கள் மற்றும் கிளைகளை வெட்டி அகற்றி பெயர் குறிப்பிடப்படும் இடங்களுக்கு போக்குவரத்துச் செய்தல் |
| 13. | பெயர்பலகை/ அறிவித்தல்/ ஸ்டிக்கர் வெட்டுதல்/ தினமுத்திரை இறப்பர் முத்திரை | 35. | மின்பிறப்பாக்கி இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 14. | அச்சு விடயங்கள் (மருந்து உறை/ கதிர் வீச்சு உறை/ CT உள்ளிடும் உறை/ ஆய்வு கூட அறிக்கை | 36. | மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரண பழுதுபார்த்தல் |
| 15. | வாகன உதிரிப்பாகங்கள்/ டயர்/ டியூப் மற்றும் பற்றரி | 37. | சாக்கடை அமைப்பு Submersible Pump பழுதுபார்த்தல் |
| 16. | அலுவலக அடையாள அட்டை தயாரித்தல் | 38. | அலுமினியம் சட்டிகள் பழுதுபார்த்தல் |
| 17. | வைத்தியசாலை கட்டில்கள்/ பிணியாளர் காவி/ ட்ரொலி/ சக்கர நாட்காலி/ சேலைன் ஸ்டன்ட்/ ஒக்சிசன் ஸ்டன்ட் | 39. | உரிமை கோரப்படாத பிரேதங்களை அடக்கம் செய்தல் |
| 18. | ஆய்வுகூட உபகரணங்கள் | 40. | மின் சேர்கியூட்/ மின்கம்பி மற்றும் மின் வழங்கலுடன் சம்பந்தப்பட்ட பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் |
| 19. | ஔடதங்கள் மற்றும் சத்திரசிகிச்சைக்கான நுகர்வோர் பதார்த்தங்கள் | | |
| 20. | ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூட பாவணைப்பொருட்கள் | | |
| 21. | மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரண உதிரிப் பாகங்கள் வழங்குதல் | | |
| 22. | சாக்கடை அமைப்பிற்கு தேவையான Submersible Pump | | |

02. ஒவ்வொரு உருப்படிக்கும் மற்றும் சேவைகளிற்காக பின்வரும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் A4 காகிதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 2025**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசறை**

1. வழங்குநரின்/ ஒப்பந்தக்காரரின் பெயர்
2. முகவரி
3. தெலைபேசி இலக்கம். நடமாடும்/நிலையான (கட்டாயம்)
4. தொலைநகல் இலக்கம்
5. மின்னஞ்சல் முகவரி
6. சமூக ஊடகத் தொலைபேசி இலக்கம் (உ+ம் WhatsAPP)
7. விண்ணப்பிக்கும் வழங்கல்/சேவைக்கான தொடர் இலக்கம்
8. வியாபாரத்தின் பெயர்
9. வியாபாரத்தின் முகவரி
10. வியாபாரப் பதிவு இலக்கம்
    (விண்ணப்பிக்கும் சேவைக்கான/ வழங்கலிற்கான வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று கண்டிப்பாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)
